# தமிழர் தகவல்

இலண்டன்

Tamils' Information

டிசம்பர் 2005




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்



இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# Lakshmis Jewellers

276 High Street North London E12 6SA U.K

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

# தமிழர் தகவல் Tamils' Information

டிசம்பர் 2005 | மலர் : 03 | இதழ் : 30


" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## வினையும் விளைச்சலும்

மேல்நாட்டு ஏகாதிபத்தியங்களின் எதிர்ப்புக்கு ஏமாற்றம் தந்த தீர்வாக இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்துள்ளது. இழுத்தடிப்புக்களும், ஏமாற்றங்களும், வலைப்பின்னல்களும், வார்த்தை ஜாலங்களும் ஒரு இனத்தின் உணர்வுகளை மழுக்கடித்துவிட முடியாது என்பதை வெளிப்படையாக உணர்த்தி நிற்கும் விவேகமான முடிவின் பிரதிபலிப்பே இது என்பது சந்தேகம் அற்ற நிச்சயித்துவமாகும்.

தமிழ் மக்கள் இத்தேர்தலைப் புறக்கணித்தமை ஜனாதிபதித் தெரிவின் தலைவிதியை மாற்றியமைத்த வரலாறாகிப் போனது. அரசியல் சாணக்கியத்தினால் ஏற்படுத்தப்பட்ட முன்னேற்பாடான இராஜதந்திரங்கள் அனைத்தும் தமிழீழத் தேசியத் தலைமையினால் தட்டிக் கொட்டப்பட்டு விட்டன என்பது தான் உண்மையாகிப் போனது. உலக நாடுகளின் தலையீடுகளைப் புகுத்தி விடுதலை வேட்கையை விரட்டலாம், போராட்டத்தைப் பின்தள்ளிவிடலாம் என்ற பேதமைக்குப் பேய் விரட்டல் நடந்துவிட்டது. களத்தில் இருந்து அரசியலுக்கு அமைதிப் பேச்சுக்கு வந்தபின் கிழக்குத் தென்தமிழீழத்தைப் பிரிக்கும் கில்லாடி வேலையைக் கருணா மூலம் ஆரம்பிக்கப்பட்ட கயமைத்தனம், உறவாடிக் கொண்டே உள்ளே துளைபோட முனைந்த அந்நாட் துரோகம்: இன்று அவர்களாலேயே வெளிக் கொணரப்பட்ட வேடிக்கையான விடயமானது தான் ஐக்கிய தேசியக் கட்சியின் சரிவுக்கு காரணமாகிவிட்டது. ஏற்கனவே இவைகள் தெரிந்த விடயமாயினும் அதை நம்ப மறுத்த நம்மவர்கள் ஏராளமான பேர் ரணில் ரொம்பவும் நல்லவர் என " மனப்பாடம் " செய்து கொண்டிருந்த, வட-கிழக்குக்கு வெளியே உள்ள தமிழர்களை அதிர்ச்சியடைய வைத்தது இவ்வறிப்பு. அதன் பலன்... தேர்த்தல் முடிவில் மாற்றம் வர இன்னொரு காரணமாயிருந்தது. கனவுகள் கலந்தது போய் நிஜங்கள் நிலைப்பட்ட போதுதான் அது நேரடியாக ரணிலின் தோல்வியாகிவிட்டது.

தேர்தலில் நிற்பதற்கு முன் பேசிவந்த நிலையான சமஷ்டி என்ற கோஷம் வேட்பாளரானவுடன் விலகிபோய் விஞ்ஞாபனத்தில், மாற்றுக்கட்சிகளுடன் ஆலோசனை, அதன்பின் சர்வசன வாக்கெடுப்பு என்று ஆகி, ஆயுதப்படைகளை நவீனப்படுத்தல், கிழக்குக்கென ஒரு விசேடப் படையமைப்பு என்று குரலை மாற்றி சர்வதேச நாடுகளின் இராணுவத் தலையீட்டினால் எம்மை அழித்துவிடுவோம் என்று மிரட்டலாக உருவெடுத்தமை நரித்தனத்தின் நபுஞ்சகத்தன்மையாகி நம்பிக்கை நாசமாகிற்று. பெறுபேறு உடனடியாப் பேதமையாகிப்போனது. இப்போது மறக்காத அனுபவமாகியும் விட்டது. மாமனார் " நரியார் " போன்று மாநாடு என்றும் மாவட்டசபையென்றும் கூறி இதற்கு முன்பிருந்த படித்த தமிழ்த்தலைவர்களைப் பதவிக்கு வாங்கியது போல் இப்போதும் செய்து விடலாம் என்ற புத்திசாலித்தனம் தமிழீத் தலைமையினால் தவிடுபொடியாக்கப்பட்டுவிட்டது. தருணம் கிடைத்தால் சந்தன ஓடையையே சாக்கடையாக மாற்றிவிடலாமென்று எண்ணிய சிங்களத் தலைமைகள், தமிழீழத் தலைமையினால் விழியில் விரல்விட்டு ஆட்டப்பட்டுவிட்ட வேதனையுடன் துவள்கின்றன.

பதவிக்கு வந்திருக்கும் மகிந்தரைப் புனிதர் என்று புகன்றுவிடமுடியாது. ஆனால் தேர்தல் ஆரம்பிக்குமுன்· வேட்பாளராவதற்கு முன் எதை பேசிவந்தாரோ அதை அவர் இதுவரை மாற்றவில்லையென்பதை நாம் குறித்துக் கொள்ள வேண்டும். நண்பனாக - நல்லவனாக அவர் வேஷம் போட்டதாகச் சொல்ல முடியாது. அவர் சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் பிரதிநிதிதான். கயவனைப் புரிந்து கொள்வதை விட எதிரியை எடைபோட்டு விடுவது சுலபம். இலங்கைத் தமிழர் இப்போது இந்த உணர்வோடு தான் உள்ளனர். அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் ஒரே நேரத்தில " சாமரை " வீசும் சாமார்த்தியம் தோற்றவருக்கு இருந்ததை விட வென்றுவந்திருப்பவருக்கு குறைவுதான். அது ஒன்றுதான் நன்மையாகிறது.

உலகின் அவதானிப்பில் ஒரு தேர்தலைப் புறக்கணித்ததன் மூலம் வாக்களிக்காமலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள ஈழத்தமிழ் இனத்திற்கும் அதன் தேசியத் தலைமைக்கும் வரலாற்றில் வித்தியாசமான பரிமாணப்பதிவு உண்டென்றால் அது மிகையாகாது. களத்தில் நின்றால் என்ன, கதைக்க வந்தால் என்ன, பிரிக்க முயன்றால் என்ன, அழிக்க முனைந்தால் என்ன, தமிழீழத்தேசியம் அனைத்துக்கும் சவாலாக நிற்கும் என்பது எதிரிக்கு உணர வைக்கப்பட்ட உண்மையாகும். அவர்கள் விதைத்ததை அவர்களே அறுவடை செய்துவிட்டார்கள். விளைச்சலை அவர்கள் அனுபவிக்கட்டும்.

-ஆசிரியர்


முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval



படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்

வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !

# ஸ்ரீ சிவசக்தி

## வாக்கிய நாட்காட்டி

180, UPPER TOOTING ROAD, LONDONS,Sw177EJ TEL: 0208 7679881

ஸ்ரீ சிவசக்தி நாட்காட்டி



SRI SIVASAKTHY CALENDAR

எமது விரத காலங்களும்
பண்டிகை, பூஜைகளும்
லண்டன் நேரத்திற்கு ஏற்றபடி
துல்லியமாக கணிக்கப் பெற்றது.
**சிவசக்தி நாட்காட்டி**
லண்டனில் உள்ள பிரபல
சிவாச்சாரியார்களால் ஏற்றுக்
கொள்ளப் பட்டு பாராட்டுப் பெற்றது.
**சிவசக்தி நாட்காட்டி**

ஸ்ரீ சிவசக்தி வாக்கிய கலண்டர்

**1**

HAPPY NEW YEAR 2006


ஞாயிறு SUNDAY

மார்கழி 17

NEW YEAR'S DAY - HOLIDAY.

JANUARY 2006

உங்கள் வாழ்வு இனிக்கவும்
பூஜைகள் சிறக்கவும்,
விரதங்கள்
பலன் கொடுக்கவும்,
பண்டிகைகள் மகிழ்வளிக்கவும்
ஆண்டவன் அருள்
பொங்கிப் பெருகவும்,
வளங்கள் கொழிக்கவும்,
மனம் களிக்கவும்
**சிவசக்தி நாட்காட்டி**
வழிகாட்டும்.





# Study Medicine in Caribbean

**Admissions for MD Program Sept / January / May 2006**

12th Grade of Schooling:
OR UK equivalent:
**students with minimum grades**

UTESA Universidad Technologia de Santiago St James College of Medicine
UNIBE Universidad Iberoamericano and many more...

**listed in WHO directory**

**Total 5 years Medical Program in Caribbean**

Eligible to practice abroad after passing the
**exams of the USA, UK, Canada and others**

Opportunity for Clinical Rotations in USA

**Contact:**

**L Mannan Mob: 07834393396**
**louis@gfmconsultancy.co.uk**
**www.gfmconsultancy.co.uk**

consultancy design

## பட்டறிவுப் பகர்வு

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த வட்டாரங்களில் அடிபடும் பேச்சு இது. எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியவில்லை. ஜனாதிபதித் தேர்தலால் நொந்து, நூலாகி மனம் உடைந்து போன ரணில் விக்கிரமசிங்க தனக்கு நெருக்கமானவர்களிடம் இப்படிக் கூறினாராம்; "மற்ற எல்லாத் தலைவர்களையும் குண்டுவைத்துத்தான் கொன்றார்கள் புலிகள். ஆனால் மக்களை வாக்களிக்காமல் செய்ததன் மூலம் எனது அரசியல் வாழ்வையே கொலை செய்து விட்டார்களே..." என்றாராம் அவர்.

அரசியல் கட்சியைக் கையாள்வது வேறு விடுதலை இயக்கத்துடன் பழகுவது வேறு. விடுதலை இயக்கங்கள் 'வெட்டு ஒண்டு துண்டு இரண்டு' என்ற மாதிரித்தான் செயற்படும். இதைப் புரிந்து கொள்ளத் தவறுவது அவற்றின் தவறல்லவே...!

(-அற்பன், சுடரொளி)

## புதிய சங்கற்பம்!

"நான் வாயில் தங்கக்கரண்டி ஒன்றை ஏந்திக்கொண்டு பிறந்த இளவரசன் அல்ல. உங்களுள் பெரும்பாலானவர்களைப் போன்று சாதாரண மக்களுள் ஒருவனாகப் பிறந்து உருவான தலைவன். ஆதலால் மக்களுடைய பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்காக புதிதாக ஆலோசகர்களை நியமிக்க வேண்டிய தேவை எனக்கில்லை. என்னால் அதை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். ஆலோசகர்களுக்கும் நிபுணர்களுக்கும் அவர்களுடைய அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற இடம் வழங்கப்படும். இந்த நாட்டு மக்களோடு நான் நெருங்கிச் செல்லத் தடையாக இருக்கக் கூடிய எந்த தடைகளையும் வேலிகளையும் ஏற்படுத்திக் கொள்ள மாட்டேன். என்னுடைய ஜனாதிபதி மாளிகையும், அலுவலகமும் இந்த நாட்டு மக்களுக்காக திறந்து வைக்கப்படும்."

மகிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இன்று முதல் ஜனாதிபதி. இன்று முதல் நான் ஒரு கட்சிக்கோ ஒரு குழுவுக்கோ உரிய தலைவன் அல்ல. அரசியல் கட்சி, நிறம், சமயம், இனம் போன்ற பேதங்களின் அடிப்படையில் நான் செயற்படப் போவதில்லை. இன்று முதல் நான் கூட்டத்தின் நிருவாகத்தின் அடிப்படையிலேயே செயற்படுவேன். மனித உரிமைகளையும் பாதுகாப்பேன்."

(-ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதி ராஜபக்ஷ கன்னியுரை)

## நாம் மக்களின் மைந்தர்கள்:

1988/89 ஆண்டுகள் நாம் நெருக்கடிகளைச் சந்தித்தபோது நாம் ஒரு தளம் அமைத்து செயற்பட வழி சமைத்தவர்கள்-வலு சேர்த்தவர்கள் எம்மக்கள். பூநகரியில் நாம் 42 அடி நீளமுள்ள 5 நீரூந்து விசைப்படகுகளைக் கைப்பற்றினோம். அங்கு தொடராகக் குண்டு வீச்சு நடந்த நேரத்திலும் வடமராட்சித் தளத்துக்கு அவற்றை யாழ். குடாநாட்டின் எல்லாப் பகுதி மக்களும் இணைந்து பத்திரமாகச் சேர்த்தபடியால் தான் இன்றைக்கு நாம் கடற்படையாக வலுவடைந்துள்ளோம். ஓயாத அலை-1ல் நாம் கைப்பற்றிய பீரங்கியை எடுத்துவர பிரதான பாதை இருக்கவில்லை. யுத்தம் நடந்த நேரத்திலும் அவற்றை கடற்கரையூடாக நகர்த்தியெடுத்து வந்ததால்தான் ஓயாத அலை-1ஐ வென்றோம்.

இன்று குடாநாட்டிலே 40 ஆயிரம் சிங்களப் படைகள் உள்ளன. இவர்கள் இங்கிருந்து தப்பிப் போக ஒரேஒரு வழி கடற்பாதை மட்டும்தான். இந்தக் குடாநாட்டினது வீழ்ச்சிதான் தமிழீழ விடுதலைப் போரில் இறுதிப் போராக இருக்கும். அதில் மாற்றமில்லை."

(-சூசை, கடற்படைத் தளபதி)

## வெற்றி யாருக்கு?

"மற்ற நாடுகளில், போராடுகிற சக்திகளை ஒடுக்குவதற்காக இணைந்து செயற்பட்டு மிக இலாவகமாக ஒடுக்குவார்கள். ஆனால் இங்கே இந்தச் செயல்பாட்டைக் கூட அவர்களால் முடியவில்லையென்பதை அந்த மக்கள் 'மகிந்தரை' வாக்களிப்பினூடாக தெரிவு செய்துள்ளதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். மிகப்பெரிய அவலமாக மாறப்போகிறது இத்தீவு. முரண்பாடுகள் எல்லாம் முற்றிக் கூர்மையடைந்து வெடிக்கிறபோது இத்தீவிலே இரத்த ஆறு ஓடுவது கண்ணுக்கு முன்னால் தெரிகிறது. அதைத் தடுக்கும் வலிமை கூட பிரபாகரனிடம்தான் உண்டு. இராணுவத்தின் ஊருடுவல், ஆட்சிக்கவிழ்ப்பு, சதிப்புரட்சி என சிங்கள தேசம் நாசமாகப் போகிறது. அதைத் தடுக்கும் ஆற்றல் எங்களிடம் தான் உள்ளது. ஆகவே பிரபாகரன் வெல்ல வேண்டுமென்று சிங்கள மக்களே விரும்புவார்கள். இதைத்தான் மகிந்தவின் வெற்றி பிரபாகரனின் வெற்றியின் தொடக்கம் என்று நான் கூறியிருந்தேன்."

(-க.வே. பாலகுமாரன் உரை)

## கட்சித்தலைமைகளிலிருந்து கல்தா!

ஜனாதிபதித் தேர்தல்கள் முடிவுகளை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து முன்னாள் ஜனாதிபதியான சந்திரிக்கா குமாரதுங்காவையும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவையும் ஓரங்கட்டுவதற்கான உள்கட்சி காய்நகர்த்தல்கள் ஆரம்பமாகிவிட்டன. இலங்கையில், கொழும்பு அரசியல் அரங்கில் ஏற்படப்போகும் அதிரடி மாற்றங்களை இனி அடுத்தடுத்துக் காணலாம்.

(-'சுடரொளி', கொழும்பு)

## மலையகத்தில் மாற்றமா?

இலங்கையில் மலையக மக்களின் வாழ்க்கைத் தரமும் வாழ்வின் மதிப்பீடுகளும் சரிந்து கொண்டிருக்கின்றன. பொய்யுடன் கலந்த போலிகளின் தலைமைகளும், கலாச்சாரச் சுரண்டல்களும், வணிகப் பித்தலாட்டங்களும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறன. சகல துறைகளிலும் ஆழத்தையும் செய்நேர்த்தியையும் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்ச் சமூகம் காலத்தோடு செய்ய வேண்டிய உயிர்ப் பிணைப்பு அறுந்துகிடக்கிறது. ஐரோப்பிய ஒன்றியமும், சர்வதேச சமூகமும், தென்கிழக்காசிய கெடுபிடிகளும் தமிழரின் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்க முயலும் இவ்வேளையில் நாம் காத்திரமான முடிவைச் செய்ய வேண்டும். வடக்கு-கிழக்கில் ஏற்படும் மாற்றங்களே, மலையகம், தென்னிலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்விலும் மாற்றங்களை உண்டுபண்ணும். நான் இந்த உண்மையை வலியுறுத்தினாலும் எத்தனை பேர் இதை ஏற்றுக்கொள்வார்கள்."

(-சி.வே. இராமையா, தினக்குரல்)

## சிந்தனையற்ற சிங்களதேசம்:

"வடக்கு-கிழக்கு சிறுபான்மையினரின் வாக்குகளைக் கிஞ்சித்தும் பெறாமல், தென்னிலங்கைச் சிங்களவர்களின் வாக்குகளை மட்டும் பெற்று ஜனாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டமை இலங்கை அரசியலுக்கு ஒரு சுப சகுனமல்ல. இதனால் ஏற்படப்போகும் விளைவுகளை அனைவருமே எதிர்கொள்ள வேண்டியேற்படும். சிறுபான்மையினரை மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்ப்பு குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது."


(-ஸ்ரீதுங்க ஜயசூரிய- ஸ்ரீலங்கா ஜனாதிபதி வேட்பாளராக நின்றவர்)



ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை
Prime Food & Wine
News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables
மணங்கவரும் மளிகைச்சாமான்கள், மென்பானங்கள்,
மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப்
பெற எம்மை நாடுங்கள்
118, Tooting High Street
London SW 17 0RR
Tel : 020 8682 3777




வோல்த்தம்ஸ்ரோவில்
Kumarans
குமரன்ஸ்
TEXTILES
136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444
8530 3033
Fax : 020 8521 9444

New Mot Station Open !
CAPITAL AUTOS LTD.
CA
இவர்களின்
விளம்பரத்தை
ttn
IBC
வானொலி
தொலைக்காட்சியில்
கேளுங்கள்
• Fully equipped M.O.T. & accident repair centre
• Insurance repairs welcome
• Recovery Service
• Approved insurance repairs
• Courtesy vehicle available For most repairs
• Professional friendly service and advice
• Collection & deliver within the local area
BMW MERCEDES
VAUXHALL
HONDA
VOLKSWAGEN
NISSAN Ford
51A Milton Avenue
East Ham
London E6 18G
Tel : 020 8470 4789
Fax : 020 8472 2147
www.capitalauto.com
Accident Repair Centre &
General Services &
Repairs to all
Makes and Models
இலண்டனில் எந்த இடத்தில் இருந்தாலும்
உங்கள் வாகனத் திருத்த வேலைகளுக்கு
நீங்கள் செல்ல வேண்டிய இடம்
£ 10 OFF
Your M.O.T !
Hurry - Limited Offer !
Reg :
Model :
Name :
Tel :
BASED ON CURRENT M.O.T FEE OF £42.10 • OUR VOUCHER PER CAR ONLY

## நட்புக்காலம் !

தேர்வு முடிந்த
கடைசி நாளில்
நினைவேட்டில் கையொப்பம்
வாங்குகிற
எவருக்கும் தெரிவதில்லை
அது ஒரு
நட்பு முறிவிற்கான
சம்மத
உடன்படிக்கை என்று !

- கவிஞர் அறிவுமதி

## ஞானம்

ஞானம் பெற்றது
நீ -
உன் மண்ணில்
பள்ளிக்கூடங்கள்
கட்டப்பட்டதால் -

நான் -

என் மண்ணில்
பள்ளிக் கூடங்கள்
இடிக்கப்பட்டதால்

- கவிஞர் காசி ஆனந்தன்

## தம்பி 51

நேரில்
உன்முகம் பார்த்ததில்லை
நினைவில்
உன்முகம் மறந்ததில்லை

வயதில்
எனைவிடச் சிறியவன் நீ
வாழ்வில்
எவரினும் பெரியவன் நீ

அறமும்
அகிம்சையும் தோற்றபின்னர்
அறுவை
முறையே ஏற்றதென

ஆயுதம்
கைகளில் ஏந்திவந்தாய்
அக்கினி
ஆற்றில் நீந்திவந்தாய்

எத்தரின்
தலைகளை வாங்கிய வாள்
எத்தனை
துயரங்கள் தாங்கிய தோள் !

அத்தனை
துயரிலும் உடன் நின்றார்
மொத்த
ஈழத் தமிழ்மக்கள்

இடிந்தது
எதிரிகள் ஈனத்தனம்
விடிந்தால்
வெல்லும் உன் ஈழத்தவம்

விரைவில்
இறுதிப் புயல்வீசும்
வேங்கைகள்
ஆள்வார் தமிழ்த்தேசம் !

- சுபவீ

## கண்ணீரில் வாழ்வேன்

நாள் வந்துபோகும்
மகவொன்று காண்பேன்
நான் பெற்ற சீரை
அவனுக்குச் சொல்வேன்
கதை கேட்ட பிள்ளை
கருத்தாக வாழும்
கதை சொல்வதற்கே
கண்ணீரில் வாழ்வேன்!

- தென்கச்சி சுவாமிநாதன்

## தமிழாய் மணப்பேன் !

அன்றையுமிருந்தேன் ;
இன்றையுமிருந்தேன்,
ஆனபின் என்றையும்
இருப்பேன் ;

ஒன்றையுந் தவிரா
துயிருணர் வுடலாய்
ஒன்றினுள் ஒன்றாய்
உயிர்ப்பேன் ;

என்றையுமில்லா இருள்
நினை வில்லேன்,
என்றையும் பின்றையும்
இருந்தேன் !

மன்றையும் நிறைத்து
மனத்தையும் குவித்து
மலர்த்து மெய்த் தமிழாய்
மணப்பேன்

- புலவரேறு பெருஞ்சித்திரனார்

## ஞான ஜனனம்

நண்பனோடு அன்புசெய்து
என்புருகப் பழகிவிட்டுத்
துன்பமுறும் போது வந்து
தோணும் - நட்பு
தோள் கொடுப்பதில்லை என்ற
ஞானம் !

- கவிஞர் மு. மேத்தா



மாதமிரு திருக்குறள் கற்போம்

## இடனறிதல்

**அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாலை**
**யெண்ணி யிடத்தாற் செயின்** **(குறள் : 497)**

பகைவரை வென்றுதற்காய் வழிகளை குறைவறச் சிந்தித்து தக்க இடமும் அறிந்து அதனோடு பொருந்தச் செய்வாராயின் தக்க இடமும் அறிந்து அதனோடு பொருந்தச் செய்வாராயின் அஞ்சாமை ஒன்றே போதும் வெல்வதற்கு. அஃதல்லாமல் வேறு துணை வேண்டுவதில்லை.

**சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா**
**லூக்க மழிந்து விடும்** **(குறள் : 498)**

பெரிய படையை உடைய அரசனேனாயினும் சிறிய படையை உடையவனுக்கு பாதுகாப்பான இடத்தில் சென்று போர் செய்வானானால் தன் மன எழுச்சி குன்றிப் பெருமை கெடுவான். பெரிய படையனனாயினும் இடமறியாது சென்றால் தோற்க நேரிடும்.

# மண்

இலங்கைத் தமிழ் திரைப்பட வரலாற்றில் நீண்ட இடைவெளிக்குப் பின் பிலிம் ஏசியா புரடக்ஷன்ஸ் தரும் முழு நீண்ட சினிமாஸ்கோப் திரைப்படம் '' மண் ''.

சர்வதேச அரங்கில் தமிழ் சினிமாவுக்கான தனி அங்கீகாரத்தை பெற்றுக்கொடுக்கும் நம்பிக்கையோடு உருவாகிக்கொண்டிருக்கும் திரைப்படமே இந்த '' மண் ''.

எப்படி மண்ணானது, நாம் பிறக்கிறபோது..... தவழ்ந்து நடக்கிறபோது..... உழுது விதைக்கிறபோது..... அழுது அணைக்கிறபோது..... காதலித்துக் கட்டிப் புரள்கிறபோது..... மரணித்து ஆத்மா அடங்குகிறபோது..... எம்மைச் சுமக்கின்றதோ அதே போல எம் திரைக்காவியம் '' மண் '' கூட உங்களை ஒரு தமிழ்க் கிராமத்திற்கு. அழைத்துச் சென்று அங்கே வாழவிட்டு..... அழவிட்டு..... சிரிக்கவிட்டு..... சிந்திக்கவிட்டு..... உணர்ச்சி ததும்பவிட்டு..... படமாக இல்லாமல் உங்கள் வாழ்வின் பகுதியாக எண்ணவிட்டுத் திரையரங்கிலிருந்து வீட்டுக்குச் செல்ல வைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு

முழுக்க முழுக்க இலங்கையில் படமாக்கப்பட்ட இந்த திரைப்படம் D.T.S டிஜிடல் ஒலிக் கலவையில் வெளிவர இருப்பதோடு மட்டுமல்லாது இலங்கைத் தமிழ் சினிமாவின் மறுபிறப்பிற்குக் கட்டியம் கூறும் என்பதும் மிகையல்ல. ஒரு தமிழ்க் கிராமத்தின் மண்வாசனையை அள்ளி வரும் இந்த மண் ஒரு திருப்பு முனையாக, வாழ்வின் மூச்சாக, உயிரின் நிழலாக உங்களோடு இணையப்போகிறது என்ற நம்பிக்கையோடு வெளிக்கொண்டு வர இருக்கிறோம்,

காதலும் அரசியலே ! வாழ்வும் அரசியலே !!

எம்மவருக்கு ஆதரவு தர வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த இதழின் அட்டையை அலங்கரிக்கிறது.




மிதுன் சுந்தரேசன் தனது 5வது பிறந்த தினத்தையும், மைலன் பிரபு தனது 2வது பிறந்த தினத்தையும் இம்மாதம் இலண்டனில் கொண்டாடுகிறார்கள்.

வாசகர்களே உங்கள் குழந்தைகளின் படமும் இந்த இடத்தை அலங்கரிக்க தமிழர் தகவலுக்கு அனுப்பி வைக்கலாமே.

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்**



27.12.2005இல் 50வது அகவையில் அடியெடுத்து வைக்கும்

**திரு. தி. அருள்தாஸ்**

அவர்களுக்கு

**தமிழர் தகவல்**

வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது


# லதா தமிழ் களஞ்சியம்

**SRI LANKAN, ENGLISH & CARRIBEAN FOODS**
**AUDIO, VIDEO, TEXTILES & TRAVEL TICKETS**

**எம்மிடம் தினமும் இலங்கை, இந்திய பசுமையான மரக்கறி வகைகள், பழ வகைகள், அனைத்து ரக அரிசி வகைகள், கடலுணவுப் பொருட்கள்**

சனி – ஞாயிறுகளில் உடன் பங்கு ஆட்டிறைச்சி

சமையலுக்கும் தேவையான பல வகைப் பாத்திரங்கள், சுவாமிப்படங்கள், கோவிலுக்குத் தேவையானப் பொருட்கள்

முன்னணி எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுவர்களுக்கான ஆரம்பப் புத்தகங்கள், தமிழ் – சிங்கள சஞ்சிகைகள்.

தொலைபேசி அட்டைகள், தமிழ். ஹிந்தி, சிங்கள, ஆங்கிலத் திரைப்படங்கள்

DVD, VCDs, AUDIO, CDகளை வாடகைக்கும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்

**30 LOAMPIT HILL, LEWISHAM, LONDON SE13 7SW**

**TEL : 020 8265 0629**

**LATHA SUPER COMPLEX**




# LinkAIR

## Travels Limited



ATOL PROTECTED 5047

IATA 91-2 5704 0

SriLankan

*Special Fares to : Colombo, Madras, Singapore, Canada*

We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO

361 London Road, Croydon, Surrey CRO 3PB
Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்

இலண்டன் மாநகரில்

# GALAXY NEWS

உங்களுக்குத் தேவையான விரும்பிய நூல்களை
ஓடருக்கு உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்

**GALAXY NEWS**

**84, Brooks Croft Road London E17 4JR**
**Tel : 07958 360 176 Fax : 020 8527 2324**



தொடர்புகளுக்கு
**K. Alagan**

# Mierra Jewellery Mart

Gems & Jewellery

34 London Road Tooting London SW 17 9SP
Tel : 208 648 7750 www.meera_jewellery.com

பழைய தங்கத்தில் புத்தம் புதிய நகைகள் செய்து கொள்ள,
அதிர்ஷ்ட நவரத்தின கற்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத் தேவையான 22ct சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள



# பாவம் விருந்தினர்கள்

கிரேக்க நாட்டிலே ஒரு மன்னர் இருந்தார். அவர் ஒரு மாதிரியான மன்னர். கொஞ்சம் பிடிவாத குணம், கொஞ்சம் கிறுக்குத்தனம் இரண்டும் அவரிடம் உண்டு.

அந்த மன்னர் ஓர் அழகான கட்டிலைச் செய்து வைத்திருந்தார். அது தங்கத்தால் ஆன விலை உயர்ந்த கட்டில். விலை உயர்ந்த வைரம் எல்லாம் அதிலே பதித்து வைத்திருந்தார்.

அதில் மரமே கிடையாது. எல்லாம் தங்க மயம் !

இவ்வளவு விலை உயர்ந்த கட்டில் வேறு எங்குமே கிடையாது. அப்பேர்ப்பட்ட அபூர்வமான கட்டில்.

அந்த மன்னர் தனக்கென்று சில கொள்கைகளை வைத்திருந்தார். அரண்மனைக்கு யாராவது முக்கிய விருந்தினர்கள் வந்தால்... அவர்களை அந்தக் கட்டிலிலே படுக்க வைப்பார்.

ஆனால் ஒரு விஷயம். வருகிற விருந்தினரின் உயரம் அந்தக் கட்டிலின நீளத்திற்குச் சரியாக இருக்க வேண்டும். அதில் படுத்தால்... கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கக் கூடாது.

அப்படி ஒரு ஒழுங்கு முறையை அவர் எதிர்பார்க்கிறவர்.

யாராவது ஒரு விருந்தினர் வந்தால்... அன்றைக்கு இரவே அவர் அந்தக் கட்டிலில் படுக்க அனுமதி கொடுப்பார். வருகிற ஆசாமி அந்தக் கட்டிலைவிட நீளமாக இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். கட்டிலுக்கு தகுந்த மாதிரி காலை வெட்டிவிடச் சொல்லுவார்.

ஏனென்றால், அந்தக் கட்டில் விலை உயர்ந்தது. அதை மாற்ற முடியாது. ஆகவே கட்டிலுக்குத் தகுந்த மாதிரி ஆளை மாற்றிவிடுவார்.

அங்கே கட்டில்தான் முக்கியம். மனிதன் முக்கியமல்ல.

அதே போலத்தான்...

பல சமயங்களில் நமக்கு வாழ்வு முக்கியமாகத் தெரிவதில்லை. சட்டத் திட்டங்கள்தான் முக்கியமாகத் தெரிகின்றன.

பொதுவாக ஓர் அளவை வைத்துத்தான் கட்டில் தயார் செய்ய முடியும். ஒரு சராசரி மனிதனின் அளவு அது.

சராசரி என்பது... ஓர் எடுத்துக்காட்டுக்குச் சொல்ல வேண்டுமென்றால்.... பத்து மனிதர்களின் உயரத்தைக் கூட்டி, அதைப் பத்தால் வகுத்து வரக்கூடிய ஓர் அளவு. கணக்கின் ஒரு கற்பனை வடிவம் அது.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

அந்தக் கணக்கின் அடிப்படையில்தான் அந்தக் கட்டில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் -

சராசரி உயரமுள்ள மனிதன் என்பவன் கணக்கிலே வேண்டுமானால் இருக்கலாம். நடைமுறையில் இருக்க முடியாது. அது கணக்கில் ஏற்பட்ட ஒரு கற்பனை அளவு. அந்தக் கற்பனை அளவுக்கு நூறு சதவீதம் சரியாக ஒரு விருந்தாளி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்குமா?

சரி.

அந்தக் கட்டிலைவிட நீளம் குறைவாக அதாவது உயரம் குறைவான ஓர் ஆசாமி வந்துவிடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போதும் அந்த மன்னர் சும்மா இருக்க மாட்டார். அதற்கென்றே அரண்மனையில் பல பலசாலிகளை வைத்திருக்கிறார். அவர்களைக் கூப்பிடுவார். வந்த விருந்தாளி இவர்தான் என்று அவர்களுக்கு அடையாளம் காட்டிவிடுவார்.

தலைப் பக்கம் நாலு பேர், கால் பக்கம் நாலு பேர் அவரைத் தூக்கிப் பிடித்துக் கொள்வார்கள். பலம் கொண்ட மட்டும் இருபுறமும் இழுப்பார்கள். அப்படி இழுத்துக் கட்டில் அளவுக்குச் சரியாகக் கொண்டுவருமாறு கட்டளை இடுவார்.

உடம்பு என்ன கம்பியா... தட்டி நீட்டுவதற்கு ? வருகிற விருந்தினர் நல்ல முறையிலே படுத்து உறங்கி மகிழ வேண்டும் என்றுதான் அந்த மன்னர் நினைக்கிறார். ஆனால் கட்டில் நீளத்துக்கு, வருகிறவரும் இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதால் எவ்வளவு இடைஞ்சல்? இது அரசனின் தவறல்ல ; ஒழுங்குமுறையின் தவறு என்கிறார் ஓஷோ.

வாழ்க்கையை நெறிப்படுத்துவது என்பது வேறு ; கட்டுப்படுத்துவது என்பது வேறு ; ஒழுங்குமுறையைத் திணிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு பல பேர் வாழ்வையே இழந்து விடுகிறார்கள்.

வாழ்வின் இயல்பு ஆனந்தம்... மனிதர் அந்த மகிழ்ச்சியை அடைய வேண்டுமென்றால் திறந்த மனதோடு செயல்படவேண்டும். இது தெரியாத காரணத்தால் நம்மில் பலபேர் வாழ்க்கையின் முக்கியமான சில பகுதிகளை இழந்துவிடுகின்றோம்.

நம்மில் சிலர் வேறு மாதிரியாக ஒழுங்கு படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். அது எப்படித் தெரியுமா?

ஒரு மருத்துவமனை அறுவைச் சிகிச்சை நடந்து முடிந்தது. அதன் பிறகுதான் நர்ஸ் அவசரமாக ஓடிவந்தார்.

" டாக்டர் ! இதோ இந்த பேஷண்டுக்குக் கால்லேதான் கட்டி...ஆனா நீங்க மூளையிலே கட்டின்னு நினைச்சுக்கிட்டு தவறாக தலையிலே போய் ஆபரேஷன் பண்ணிட்டீங்க... மூளை ஆபரேஷன் பண்ண வேண்டிய நோயாளி 15-ஆம் நம்பர் பெட்லே இருக்கார் !"

" பரவாயில்லை... அதனாலே என்ன? கட்டிலை மாத்திட்டா போச்சு ! இவரைக் கொண்டு போய் 15-ஆம் நம்பர் பெட்லே போட்டுடு... சரியாப் போயிடும் !"

## ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம் - புங்குடுத்தீவு கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் 16.03.2005 புதன்கிழமை நடைபெற்ற ப்ரமோற்சவ துவஜாரோகண விழாவில் சர்வசாதக சிவாச்சாரியராக தலைமையேற்று விழாவைச் சிறப்பித்தமையைப் பாராட்டிக் கௌரவித்து இலங்கை வாழ் சிவாச்சாரியார்கள் சைவப் பெருமக்கள் சார்பில்

'' இந்தியத் தலைமை சிவாச்சாரியார் '', '' சர்வ சாதக திலகம் '' இந்திய - தமிழ்நாடு பிள்ளையார்பட்டி வேதாகம கல்லூரி அதிபர்

**டாக்டர் சிவஸ்ரீ பிச்சை சிவாச்சாரியார்**

அவர்களுக்கு

**சிவாகம ஞான சாகரம்**

எனும் சிறப்பு பட்டத்தினை '' சிவாகம கலாநிதி '' டாக்டர் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்களின் நல்லாசியுடன் கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் வழங்கி கௌரவிக்கிறது.


'' வாழ்க பல்லாண்டு, வளர்க அவர்தம் பணி ''

'' சிவாச்சார்யகுலபூஷணம், சிவாச்சார்ய கலாநிதி ''

**டாக்டர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்**

(ஆலயபிரதமகு, ஆலயமுதல்வர், பிரமோற்சவ குரு)





## பழங்களும் குடல் அழற்சியும் !

பழங்களில் உள்ள சக்கரைச்சத்து இரண்டுவிதமானது. ஒன்று குளுக்கோஸ் என்றும் மற்றொன்று ஃப்ருக்டோஸ் என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டுவிதமான சத்துகளும் பழங்களில் கலந்தே இருக்கும். சீரானபிறகு குளுக்கோஸ் இரத்தத்தில் எளிதாகக் கலந்துவிடும். ஆனால் ஃப்ருக்டோஸ் குடலில் வாயுவை உற்பத்தி செய்யும். ஒரு பழத்தின் இந்தச் சத்துக்கள் எந்த விகிதத்தில் கலந்துள்ளன என்பதும், அந்தப்பழத்தில் நார்ச்சத்து எந்த அளவு உள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டியவை. குளுக்கோஸ் அதிகமாக உள்ளபழம் வயிற்றில் கோளாறுகளை உண்டாக்குவதில்லை. மற்றைய சத்து கூடுதலாக இருந்தால் வாயுத்தொல்லையை ஏற்படுத்தும். சீரணக்கோளாறு வயிற்றுப்போக்கு உள்ளவர்களுக்கு பச்சைத் திராட்சைப்பழம் நல்லது. நாவற்பழம், அன்னாசி போன்றவை வாயுத் தொல்லையை உண்டாக்குவதில்லை. ஆனால் பேரிக்காய், செர்ரி, வாழைப்பழம் போன்றவை காலி வயிற்றில் வாயுத் தொல்லைகளை உண்டாக்க வல்லவை. ஆனால் மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு இப்பழங்கள் நல்லவை.




# குறுகத் தறித்த குறள்

## சுப. வீரபாண்டியன்



கூடுதல் நேரம் ஒதுக்காமல், சட்டென்று விடை சொல்லுங்கள், உங்களுக்குப் பிடித்த குறள் எது என்று ஒரு நண்பர் கேட்டபோது, ஒரு நிமிடம் சிந்தித்துவிட்டுச் சொன்னேன் :

'' யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் ''

என்ன பொருள் என்று நண்பர் கேட்டார். எதன் மீது, எதன் மீதெல்லாம் நமக்கு விருப்பமில்லையோ, அதனால் அதனால் எல்லாம் நமக்குத் துன்பமில்லை.

ஆசையே துன்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்று புத்தரும் சொல்லியிருக்கிறார். ஏறத்தாழ அதே கருத்தைக் கொண்ட இக்குறள், துறவு என்னும் அதிகாரத்தில் முதல் குறளாக இடம்பெற்றுள்ளது.

துறவு என்பது ஒரே நாளில் ஏற்பட்டுவிடாது. அது ஒருவிதமான மனநிலை. மெல்ல மெல்ல, வாழ்க்கையும் அனுபவங்களும் கற்றுத்தரும் பாடங்களின் மூலம் அந்நிலை நம்மில் சிலருக்கு வரலாம். இந்தக் குறளின் சிறப்பு, பகுதி பகுதியாகத் துறவை நமக்குக் கற்பிப்பதுதான். உலகிலுள்ள எல்லாப் பொருட்களின் மீதும் ஒரே நேரத்தில் பற்றின்மை ஏற்பட்டு விடாது என்பதை அறிந்த வள்ளுவர், எதன் மீது எதன் மீதெல்லாம் என்று ஒவ்வொன்றாக விலக்க நமக்குக் கற்றுக்கொடுக்கிறார்.

செல்வத்தின் மீதும், பொருட்களின் மீதும் அளவு கடந்த பற்று வைத்திருப்பவர்கள், என்றாவது ஒருநாள் அவற்றை இழக்க நேர்ந்தால், தங்கள் உயிரையும் இழந்து விடுகிறார்கள். சிலம்பில், தன் செங்கோல் வளைந்தபோது, தன் உயிரைத் துறந்தான் பாண்டிய மன்னன். அவன் செத்ததற்குச் செத்தாள் அத்தென்னாட்டு அன்னம். இவ்வாறு எதன் மீதெல்லாம் பற்று வைத்திருந்தார்களோ, அதனாலெல்லாம் இவர்கள் அல்லல் பட்டதை நாம் அறிகிறோம்.

சில காலம் கடந்த பின்பு, எனக்குள் ஒரு வினா எழுந்தது. பற்று வைக்கும் பொருட்களால் மட்டும்தான் நமக்குத் துன்பம் நேருமா என்பதே அவ்வினா. நாம் சிலரையும், சில பொருள்களையும் வெறுக்கிறோம். அவர்களாலும் நமக்குத் துன்பம் ஏற்படவே செய்கிறது. இதற்கு என்ன விடை என்று சிந்தித்தபோதுதான், மேலே உள்ள குறளுக்கான பொருளை நான் தவறாகப் புரிந்துகொண்டுள்ளேன் என்பது தெரிந்தது.

யாதனின் யாதனின் நீங்கியான் என்னும் தொடரில் உள்ள நீங்கியான் என்னும் சொல்லுக்கு, பற்றில்லாதவன் என்று மட்டும் பொருளாகாது. நீங்குதல் என்பது, அதன் மீது விருப்போ, வெறுப்போ இல்லாமல் விலகி நிற்றலே ஆகும்.

இவ்விடத்தில், வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல என்னும் குறளையும் நாம் நினைவு கூரலாம். இறைவனை, வள்ளுவர், வேண்டுதல் வேண்டாமை இலான் என்கிறார். அப்படி விலகி நிற்றல்தான் நீங்குதல் ஆகும்.

கிறித்துவர்களும், யூதர்களும் ஏற்றுக்கொண்டிருக்கும் பழைய ஏற்பாடு ( Old Testament ), ஆபிரகாம் பற்றிய கதை ஒன்றைச் சொல்கிறது. பாலைவனத்தில் தன்னிடம் வந்த ஒருவனுக்கு ஆபிரகாம் ஒரு குவளைத் தண்ணீர் கொடுக்கிறார். நீரைப்பெற்றுக் கொண்டவன் அதனைக் கைகளில் ஏந்தி, கதிரவனை நோக்கி வழிபடுகிறான். அதைக்கண்ட ஆபிரகாம் அந்தத் தண்ணீர்க் குவளையைக் கீழே தட்டிவிடுகிறார். அப்போது அவர் முன் கடவுள் தோன்றி, ஏன் அப்படிச் செய்தாய் என்று கேட்க, உங்களுக்கு இணையாக இன்னொருவரை வணங்குவதை எப்படி நான் ஏற்க முடியும் என்கிறார் ஆபிரகாம். கடவுளோ, அவனை நான்தான் உன்னிடம் அனுப்பி வைத்தேன். அவன் என்னை நம்பாமல் வேறு வழிபாடுகளை மேற்கொள்வதை நான் அறிவேன். ஆனால் அதுபற்றிக் கவலைப்படுவது உன் வேலையல்ல. என்னை நீ தினமும் வழிபடுவதால் நீ எனக்கு வேண்டியவனும் இல்லை, அவன் எனக்கு வேண்டாதவனும் இல்லை. எல்லோரும் எனக்குச் சமமானவர்களே என்று விடை சொல்கிறார்.

கடவுள் ஏன் அப்படிச் சொன்னார், அந்த விடைக்குள் இருக்கிற தத்துவார்த்தச் சிந்தனை என்ன என்பதெல்லாம் வேறு செய்திகள். ஆனால் வேண்டுதல் வேண்டாமை இல்லாத இயல்பே மிக உயர்ந்த நிலை என்பதை எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்டிருப்பதை இங்கே காண முடிகிறது.

எனவே அந்த மிக உயர்ந்த நிலையை நோக்கி நம்மை முன்னெடுப்பதே, யாதனின் யாதனின் என்று தொடங்கும் குறளின் நோக்கம். நீங்குதல் என்பது, பற்றறுத்தல் என்பது மட்டுமன்று, யார் அல்லது எதனையும் விரும்பாமலும், வெறுக்காமலும் இருக்கக் கற்றுக் கொள்வதே ஆகும். ●

## திருமண சேவை

சுயம்வரம் மணமுறையை அன்று மன்னர்கள் அனுபவித்தார்கள்! சுயம்வரமுறைக்கும் கிட்டத்தட்ட இணையான இனிய முறையான 'சுயதெரிவுமுறையை' மக்கள் ஆட்சிக்காலத்தில் நீங்களும் அனுபவிக்கலாம்!... குரும்பசிட்டியூர் மாயெழு வேல்அமுதனின் ஆக்கத்தில் உருவான சுயதெரிவுமுறைமூலம் நீங்கள் விரும்பக்கூடியதா? சாதகம் பொருந்தக்கூடியதா? என்பதை பார்வையிட்ட கணமே முடிவுசெய்யலாம்! மணமக்கள் பற்றிய ஒவ்வொரு கடிதக்கோப்பும் 1.சம்பத்தப்பட்டவரின் விவரங்கள் 2.சாதகக்குறிப்பு 3.போட்டோஅல்பம் 4.பொருத்த அட்டவணை ஆகியவற்றைத் துல்லியமாகத் தந்துதவுகின்றது!



மேலதிக விபரங்களை விசாரித்தறிய திங்கள், புதன், வியாழன், வெள்ளி கிழமைநாட்களில் இலங்கைநேரம் மாலை மணி 4.30-8.30 வரையான நேரகாலத்துள் வேல்அமுதனுடன் தொடர்புகொண்டு விசாரித்தறிக!
தொலைபேசி: 094112360488.
தொலைபேசி/தொலைநகல்: 0094114514369

முகவரி:
Reputed Marriage Facilator,
'Self Selection System' Forerunner
Kurumpasiddyoor Mayelu Vel Amuthan
8/3/3, Metro Apartment
(Opposite Weelawatta Police, via 33rd Lane)
55th Lane, Colombo-06



## இப்பொழுது விற்பனையாகின்றது

திருமதி மாதினி சிறிக்கந்தராசாவின் இரு சிடிக்கள் (இறுவெட்டுக்கள்) சமீபத்தில் லண்டனில் வெளியிடப்பட்டன. வித்துவான் வேலனின் நினைவுதினம் திரு அவ்வை நடராசனின் சிறப்புரையுடன் மிகச் சிறப்பாக நினைவுகூரப்பட்ட வேளையில் வேலனின் மகளின் இறுவெட்டுக்கள் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## லூயிசம் சிவன்கோவிலின் சேவைகள் விரிவடைகின்றன

லண்டனில் சைவமக்களுக்கு பல சேவைகளைப் புரிந்துவரும் லூயிசம் சிவன்கோவிலின் பணிகள் மேலும் விரிவடைகின்றன. சைவ மக்களின் இறுதிக்கிரியைகளைச் செய்வதற்கு பருத்தித்துறை - கரணவாயிலிருந்து குருக்கள் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் சேவைகளைப் பெற விரும்புவோர் கோவில் அலுவகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி: 0208 318 9844

## 2006 பொங்கல் மலர்

வணிக மலராக வெளிவர இருப்பதால் வணிக சம்பந்தமான ஆக்கங்களையும், லண்டனில் வணிகம் எப்படி உள்ளது என்ற கருத்துக்களையும் எங்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

விளம்பரதாரர் தமிழர் தகவலுடன் இணைந்து ஆதரவு தரலாமே...




## திருவாசகம்

முனைவர் அ. அறிவொளியின் விளக்க உரையுடன் திருத்தணி என். சுவாமிநாதன் பாடலிலமைந்தது.

இதன் விலை 5.00 பவுண். தபாலில் பெற விரும்புவோர் 6.00 பவுண் காசோலையை தமிழர் தகவல் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

# ஒரு தேசத்தின் குரல்

-ராணி சீதரன்

திருகோணமலை நகரில் உள்ள பஸ் நிலையம் வழமை போல் இயங்கத் தொடங்கியதற்கு அறிகுறியாக கிண்ணியா! கிண்ணியா! நிலாவெளி! நிலாவெளி! ஓமந்தை! ஓமந்தை! என்ற குரல்கள் மாறி மாறித் தனியார் தரிப்பிடத்திலிருந்து ஒலித்துக்கொண்டிருந்தன. அவன் மனதை நெருடிக் கொண்டிருக்கும் அந்தத் துயரச் சம்பவம் நடந்ததும் அந்தப் புத்தர் சிலை எழுந்தருளியதும் ஒரே இரவில் தான். அந்த சூழலும் நினைவுச் சுமைகளும் மனதை வருத்தியதால் ஒரே கிழமையாக அவன் அந்த இடத்தை விட்டு தூர எங்கோ சென்று மீண்டும் அங்கே வந்திருக்கிறான். அவளைக் காணவில்லை. அவனும் அவளும் வசந்தமாளிகையாகக் கருதி வாழ்ந்த பஸ்நிலையத்திலுள்ள பயணிகள் தரிப்பிடமும் பறிபோயிருந்தது. 15 வருடங்களுக்கு மேலாக சொந்த வீட்டைப் போல் சுகமோ துக்கமோ பசியோ பஞ்சமோ எல்லாவற்றையும் அங்கிருந்துதான் அனுபவித்திருக்கிறான். இனி அந்த இடத்தை நெருங்கியும் பார்க்க முடியாத அளவுக்கு புத்தர் சிலைப் பிரதேசத்துடன் சேர்த்து அந்தக் கட்டிடமும் முள்ளுக் கம்பியால் எல்லை போடப்பட்டிருந்தது. கட்டிடச் சுவரில் சிங்கள எழுத்தில் ஏதோ எழுதியிருந்தது. குறுக்குச் சுவர்களில் இராணுவ உடைகள் காயப் போடப்பட்டிருந்தன. சொந்தம், சுகம், இருப்பிடம், அனைத்தும் இழந்த அனாதையாய் பாலையா தனது நிலையை எண்ணிப்பார்த்த போது அவனுக்கே மிகவும் வருத்தமாக இருந்தது.

"ஏனையா அப்பிடி என்னத்தைக் கடலுக்குள்ள வெறிச்சுப் பார்க்கிறாய்?" காந்தி ஓடிவந்து அவனருகில் நின்று கொண்டு பலதடவை கேட்டிருக்கிறாள். இவளுக்குச் சொன்னால் என்ன விளங்கப் போகிறது என்ற அலட்சியம் தோன்றினாலும் அவளைச் சமாதானப்படுத்துவதற்காகச் சில கேள்விகளைக் கேட்பான். "அதோ! கடலில் என்ன தெரிகிறது?" கப்பல்... வள்ளம்..." "பிறகு அங்காள்ப்பக்கம்... அதுக்கு மேலே". "மலை... கோணேசர்." "இன்னமும் கொஞ்சம் தூரவாப்பார் கடலும் வானமும் முட்டேல்ல". "என்னைய விடய்ய உனக்கு பயித்தியம் பிடிச்சிட்டுது." காந்தி 10 வருசத்துக்கு முன்பு எப்படியோ அங்கு வந்து சேர்ந்தவள். அவள் வரும்போது 8 வயதிருக்கும். மூளை வளர்ச்சி இல்லாவிட்டாலும் வாயாடியாக இருந்தாள். "ஏன் புள்ள உன்ர அம்மா அப்பா எங்க?" "எனக்கு யாருமே இல்ல ஐயா." பாலையாவுக்கு 40 வயதிருக்கும். அவனுக்கும் சொந்தம் பந்தம் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லாததினால் அந்தப் பஸ்நிலையத்தில் வந்திருந்து கொண்டான். யாராவது அவன் மீது இரக்கப்பட்டுக் கொடுப்பதை வாங்கியுண்டு தனது வாழ்க்கையைப் போக்கி கொண்டான்.

தனியார் வாகனப் போக்குவரத்துப் பகுதியின் முன்பக்கமாக உள்ள பஸ்தரிப்பு நிலையக் கட்டிடங்கள் இரண்டு இருந்தன. அதில் முன்பக்கமிருந்த கட்டிடத்தில் தான் ஆரம்பத்தில் பாலையா இருந்தான். காந்தியும் வந்த பின்பு அவளுக்கும் பாதுகாப்பாக இருக்குமென்பதால் அதற்கு எதிர்ப்பக்கமாக உள்ள "கும்புறுப்பிட்டி" என்ற பெயர் மட்டும் அழிந்தும் அழியாமலும் தெரிந்த அந்தக் கட்டிடத்திற்கு இருப்பிடத்தை மாற்றிக்கொண்டான். அந்த இடம், சூழல் உயிர்ப்புடையதாக இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துப் கொண்டிருக்கவே பொழுது போய்விடும். முன்பக்கமிருக்கும் மணிக்கூட்டுக் கோபுரம் அதன் பின்பக்கத்தில் அமைந்துள்ள மீன் வாடியில் காலையும் மாலையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மீன் வியாபாரம் நடந்து கொண்டிருக்கும். அதற்குச் சற்றுத் தள்ளி தேநீர் கடை, சாராயக்கடை, அதை அண்டியதாக இருக்கும். முந்திய வீதியுடன் சேர்ந்திருக்கும் பொதுச்சந்தை எதிரெதிரே கோயில் கொண்டிருக்கும் கோணேசர், பத்திரகாளி இவையெல்லாம் பாலையாவின் மனதில் நிறைவைத் தரும் விடயங்கள். அதிகாலையில் எழும்பும் போது இரண்டு கைகளையும் விரித்து முகத்துக்கு நேரே பார்ப்பான். அப்படியே எழுந்து அப்பா! கோணேசா இன்றைய பொழுதுக்கு ஏதாவது வழிவிடு, என்பான். எதிர்ப்பக்கம் திரும்பி அம்மா! தாயே காத்துக்கொள் என்பான். அந்த வேண்டுதலில் ஒரு நிம்மதி பிறக்கும். பாலையாவிடம் வறுமை தெரிந்தாலும் உழைக்கக்கூடிய வல்லமை இருந்ததால் அவனின் மீது கருணை காட்டுவோர் குறைவு. காந்தியின் கலைந்த தலைமயிரும் கந்தல் உடையும் தலையைச் சரிச்சுச் சிரிக்கும் அசட்டுச் சிரிப்பும் பார்ப்போருக்கு பரிதாபத்தை தோற்றுவிக்கும். அதனாலோ என்னவோ நீட்டிய கைகளுக்கு ஏதாவது ஐந்தோ பத்தோ விழுந்து கொண்டிருக்கும்.

அவளுக்குக் காசு சேர்பதில் இருக்கும் ஆர்வம் கணக்குப் பார்ப்பதில் இருக்காது. அப்படியே பாலையாவிடம் கொடுத்துவிடுவாள். பாதுகாப்பு, பராமரிப்பு எல்லாமே அவளுக்குப் பாலையா தான். "ஏன் புள்ள தலையைச் சீவு உடுப்பமாத்து, சுத்தமாய் இருக்கோணும். மனுசரின் முன்னால் போகும் போது

மூக்கைப்பிடிக்கிற மாதிரி இருக்கப்படாது." அவன் அவளின் சுத்தத்தை அடிக்கடி ஞாபகமூட்டி வருவதால் காந்தியும் அதைப் பழகிக் கொண்டுவிட்டாள். பாலையாவின் கையைப்பிடித்தபடி சின்னப்பிள்ளையாய்த் திரிந்தவளின் செயல்களில் மாற்றம் இல்லாவிட்டாலும் ஆள் மட்டும் வளர்ந்திருந்தாள். அந்தச் சூழல் அவளுக்குப் பொருத்தமில்லாததினால் பாலையா நிழலாய் அவளைத் தொடர்ந்து கவனித்தான். "காந்தி! அந்தக் கடைக்கு முன்னால் பார் என்ன நிற்குது?" "நாய் நிற்குது. என்ன கேள்வி ஐயா." "பக்கத்தில்...?" "பக்கத்தில் குட்டியள். உனக்குப் பயித்தியம் போய்யா". இல்ல காந்தி! அந்தத் தாய் நாய்க்கு எத்தனை குட்டிகள்? "1, 2, 4, 6" "ஏய், அடி கழுதை ஒழுங்கா எண்ணவும் தெரியாது. அது நாலு குட்டியள், 1, 2, 3, 4, தகப்பன் நாயில்லை. தாய் நாய்தான் சாப்பாடு தேடிகொடுக்குது இல்லையா?" ஓம் என்பது போல் தலையசைத்தாள் காந்தி "காந்தி ஏன் சொல்லுறன் தெரியுமோ? ஒரு ஆம்பிளையளையும் தொடவிட்டுடாதே. விட்டா ஒன்ர கெதியும் அதுதான்". "அப்படியோ... சீ... நான் விடமாட்டன்". அவள் கண்ணை அகலத்திறந்து தலையைப்பலமாக அசைத்துச் சொன்னாள். காந்தி நாயினருகே போனாள் தாய் நாயிடமிருந்து பாண்துண்டைக் குட்டிநாய்கள் போட்டிப் போட்டுப் பறித்தன. உனக்கு வேணும், வேணும், எத்தனை ஆம்பிளை நாயளை நீ தொட விட்டாய் 1, 3, சீ, நீ கெட்ட நாய் அவள் நாயோடு அடிக்கடி பேசிக்கொள்வாள். அந்தக்காட்சி அவள் மனதில் பதிந்து போயிருந்தது. ஒரு ஞாயிற்றுகிழமை பாலன் கடற்கரைப் பக்கம் உலாவி வர காந்தியை அழைத்தான்.

"தலையும் கண்ணும் குத்துது. நான் வரல்ல நீ போ" சொல்லி விட்டு அவள் பயணிகள் நிற்கும் அந்த ஓடைக்குள் போய்ப் படுத்துவிட்டாள். நித்திரையில் அவளின் கையைப்பிடித்து யாரோ இழுத்தது போலிருக்க சுருண்டு எழும்பியவள், பாலையா! பாலையா!! யாரது என்றாள். கருக்கல் பொழுது ஆளை அவளுக்கு விளங்கவில்லை. அந்த உருவம் அவளின் காதருகே குனிந்து "நான் சில்வா உனக்குப் பசிக்குதா? சாப்பாடு வேணுமா?" அவன் கேள்விகளை கேட்டுக் கொள்ள கைகள் அவளுடலில் தொலைத்ததை தேடும் பரபரப்பில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. "சீ... நீ போ! உன்ர சாப்பாடும் வேண்டாம்... நீ தொடவும் வேண்டாம்... போகாவிட்டா சத்தம் போடவா?" அவளின் குரலின் வேகம் அதகரித்ததைக் கண்டு பயந்தவனாய் அவன் எழுந்து ஓடி விட்டான். அவளின் ஆத்திரம் தணியவில்லை. நாயும் குட்டியும் மாதிரி நானும் வருவதற்குத் தொட்டுப்போட்டானே. அவள் எழும்பியிருந்து சத்தமாய் அழுதாள். காந்தி! காந்தி!! ஏன் அழுகிறாய்? "பாலையா எங்க போனாய்? வாடியில் வேலை செய்யும் அந்தப் பொறுக்கி தொட்டுப் போட்டான். நானும் அந்த நாயும் குட்டியும் மாதிரி வரப்போறனா? பயமாய் இருக்கு..." சிணுங்கியபடி அழுதாள். "எங்க தொட்டவன்?" அவள் பாலையாவின் கையைப் பிடித்து இஞ்ச.... இஞ்ச மட்டும் தான். நான் சத்தம் போட ஓடிட்டான். சில்வாவுக்கு மிஞ்சிப் போனால் 16 வயசிருக்கும் அவனும் ஒரு அனாதையாக இருக்க வேண்டும். வருஷம் பெருநாள் என்று எல்லோரும் போய் விடுவார்கள் அவன் மட்டும் அங்கே இருப்பான். "தறுதலை அவன்ர வயசுக்குக் குறுக்கால போன ஆசையைப் பாரன்" பாலையா தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

அன்று இரவு பாலையாவின் நித்திரை தொலைந்து போனது. காந்தி ௭ப்பாவித் தனமாய் இஞ்ச... இஞ்ச சொன்னது விழவில்லை. ஆனால் கைபட்ட இடங்களில் எல்லாம் மின்சாரம் பட்ட அதிர்ச்சி... தூங்கிப் போன எதையோ தட்டிவிட்டது போன்ற அவதி இதுவரை காலமும் தாயாய், தந்தையாய், சகோதரனாய் காந்தியைப் கண்ணும் கருத்துமாய் பார்த்துவிட்டு வேலியே பயிரை மேய்வது போல ஒரு தடவை அறிவு விழித்துக் கொண்டபோது வியர்வைத் துளியைச் சுட்டுவிரலால் தட்டிவிடுவது போல அந்த நினைவை மறைத்துக் கொண்டான். சற்று நேரம் நிதானமாக உலவினான். கடைக்கு முன்னால் அந்த நாயும் குட்டிகளும் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தன. மெல்லிய கடற்காற்றும் நிசப்தமான இரவுப் பொழுதும் அவனை என்னவோ செய்தன. ஒவ்வொருவர் தனித்தனியாக நிற்பதற்கு வசதியாக குறுக்குச்சுவர் எழுப்பிக் கட்டப்பட்டிருந்த பயணிகள் தரிப்பிடத்தில் ஒருவர் மட்டும் சிரமப்பட்டுப் படுத்துக்கொள்ளலாம். காந்தியின் உடுப்புப் போத்தல் போன்றவை நிரம்பிய கடதாசிப் பெட்டி தலைமாட்டில் அணையாகக் கிடக்கும். நிலத்தில் "யூரியா பாக்"கை விரித்து உடலில் பழைய பாவாடையைப் போர்த்திக் கொண்டு அவள் படுப்பது வழக்கம். பாலையா அவற்றுக்குச் சற்று தூரத்தில் படுப்பான். வெளியில் நின்று பார்ப்பவர்களுக்கு உள்ளே படுத்திருப்பவர்களைத் தெரிவதற்கு வழியில்லை. வெறி கொண்டவன் போல் அவளருகே வந்தான். அவள் நல்ல உறக்கத்தில் இருக்கிறாள் என்பது நிதானமாய் வெளிவந்த மூச்சிலிருந்து தெரிந்தது.

சில்வா எங்க தொட்டவன்... இங்க... இங்க... காந்தியின் நித்திரை கலைந்து விட்டது. இதுவரை காலமும் இல்லாத புதுவிதமாய் பாலையாவின் செயல் அவளுக்குப் பயத்தை ஏற்படுத்தியது. எழும்பிக் குந்தியிருந்தாள். "நீ படு காந்தி... சத்தம் போடாத... பாலையா தானே பயமா? வேற ஆம்பிளையள் தான் தொடக்கூடாது." தான் சொன்ன கதை ஞாபகம்வர காந்தி கேள்வி கேட்க நேரத்தை விரயமாக்க விரும்பாதவனாய் அவளுக்குச் சமாதானம் சொல்லி வாயை மூடினான். காந்தி மௌனமானாள். "நல்ல

ஆளுய்யா. நீ ஏன் திடீரென அப்படியாயிட்டே?" அதிகாலையில் எழுந்து பாலையாவிடம் இது. அவன் இப்படி நடந்துக்கத்தான் வந்தான். அதுதான் அவன் பேச்சை முடிக்காமல் அவளைப் பார்த்தான். அவள் தூரத்தே துள்ளி விளையாடும் நாய்க்குட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். என்ன நினைத்தாளோ ஓடிவந்து அவன் மடியில் படுத்தாள். அறிவில்லாத இவளை நான் இப்படிச் செய்துவிட்டேனே என்ற எண்ணம் அவன் மனதுள் எழுந்து ஊசியால் குத்துவது போன்ற வலியை உள்ளுக்குள் ஏற்படுத்தியது. ஆனாலும் அவளுக்கு ஒரு திருப்தியை ஏற்படுத்தியிருக்கும் வகையில் நடந்து கொள்ளும் அளவுக்கு என்னிடம் வாலிபம் இருக்கிறதே என்ற பெருமிதமும் பாலையாவுக்கு உண்டானது. புத்தி குறைந்த காந்தி கூட அதன் பின்பு அவனைப் புரிந்து கொண்டு அவ்வப்போது அன்னியோன்னியமாகவும் அந்தரங்கமாகவும் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டாள். இரவும் பகலும் போல் அந்த நகரத்தின் இயக்கமும் ஒரே சீரானதாய் மாறிமாறி நடந்து கொண்டே இருக்கும் அந்தச் சூழலில்தான் அவர்கள் நிரந்தரத்தையும் நிம்மதியையும் அனுபவித்தார்கள். வருவோர் போவோரின் உரையாடல்களைக் காது கொடுத்துக் கேட்கும் ஆவல் பாலையாவிடம் நிறையவே உள்ளதால் யுத்த நிறுத்தம், சமாதானம், அத்துமீறல், ஹர்த்தால், போன்றவை பற்றி அவனுக்கு மனப்பாடமாயிருந்தது. அதுமட்டுமல்ல அரசியல் அலசல்களையும், அவ்வப்போது காதில் வாங்கி வைத்திருக்கிறான்.

இப்பொழுதெல்லாம் நகரத்தில் அடிக்கடி ஹர்த்தால், ஆர்ப்பாட்ட ஊர்வலம், துக்கதினம் என்று தொடருவதால் திடீர் திடீரென சனமாட்டம் குறைந்து விடுகிறது. வாகனப் போக்குவரத்து துண்டிக்கப்படுவதால் அவர்களின் வயிற்றுப்பாடும் அதோகதிதான். அன்று தொடர்ந்து மூன்றாவது நாளாக ஹர்த்தால் வாகனப் போக்குவரத்து எதுவும் நடக்கவில்லை. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. பசி நெருப்பைத் தணிக்க காந்தி போத்தலில் தண்ணீரை எடுத்து குடித்து வயிறை நிரப்பினாள். "பசிக்குதா புள்ள?" அவனின் கேள்விக்கு ஆமென்பது போல் தலையசைத்தாள். "தலையை சுத்துது. தலையிடிக்குது. என்னால் எழும்பி நடக்கக்கூட முடியல்ல". கண்ணைத் துடைத்து மூக்கைச் சீறியெறிந்தாள். "அழுறியா புள்ள? நீ பேசாமல் படுத்திரு. ஏதாவது வாங்கி வாறன்." அவளைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. பசியால் அழுதது இதுதான் முதல்முறை. அவன் எழும்பி நடக்கத்தொடங்கினான். பாலையாவிற்குக் கூட பசிக்களையாகத் தான் இருந்தது. நீண்ட தூரம் நடந்து கொண்டேயிருந்தான். காந்தி பசியால் சோர்ந்து போய்ப் படுத்தவள் நீண்ட நேரமாக உறங்கிவிட்டாள். பொழுது இருட்டியிருந்தது. பாலையா இவ்வளவு நேரமும் எங்க போயிருக்கும் என சிந்தித்தபடி அந்தப் பழைய சுவரோடு சாய்ந்தபடி இருந்தாள். "காந்தி! காந்தி!! தனிய இருக்கிறியா? பாலையா எங்க? அங்குமிங்கும் பார்த்தபடி சில்வா அவளருகே வந்தான் இந்தா புள்ள சாப்பாடு. நல்லா பசியாயிருக்கும் சாப்பிடு. அவனில் கையில் இரண்டு சாப்பாட்டுப் பார்சல் இருந்தது. அவள் இரண்டு கையாலும் ஆவலோடு வாங்கினாள். "பாலையாவிற்கும் சேர்த்து கொண்டு வந்தியா?" "ஓம் இரண்டு பேருக்கும் தான். நாளைக்கும் தருவன் நீ சத்தம் போடுவியா?" அவள் கேட்டுக்கொண்டே தன் காரியத்தில் கண்ணாகினாள். "சத்தம் போட்டால் சாப்பாடு தரமாட்டியோ?" "ஓம் தரமாட்டன்".

கையில் வந்த சாப்பாட்டை இழந்துவிடக்கூடாது என்பதில்தான் அவளின் கவனம் முழுவதுமிருந்தது. இப்பொழுது அவளுக்கு நாய்க்குட்டி கதை என்ற நம்பிக்கை வளர்ந்திருந்தது. சில்வா தனது காரியத்தை முடித்துக் கொண்டு போவதற்கு ஆயத்தமாகினான். "புள்ள இப்ப வாடியிலே வேலை செய்யிறவே இல்லை. சாப்பாடு வீணாகக் கொட்டுறம். நாளைக்கும் சாப்பாடு கொண்டு வருவன்." தனது வருகை தொடரும் என்பதை உறுதிபடுத்தி விட்டு அவன் போய்விட்டான். "காந்தி! காந்தி!! எழும்பு புள்ள இந்தா சாப்பாடு. இதுக்கு நாயா பேயா அலைஞ்சு வாறன்." "பாலையா எங்க போனீங்க? இந்தா சாப்பாடு இருக்கே. சாப்பிடுவமா?" எழும்பாமல் படுத்தபடியே கேட்டாள். பாலையாவிற்கு மின்னல் தாக்கிய அதிர்ச்சி. இவளுக்கு சாப்பாடு எப்படி வந்தது? துள்ளிக் குதித்து ஓடி வருவாள். இப்படிக் கிடக்கிறாளே ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என மனம் அச்சுறுத்தியது. "சில்வா வந்தானா?" "ஓம் பாலையா. அவன் வந்தான் சாப்பாடு கொடுத்தான். அப்புறம்.... ஒன்னையப் போல அவனும்...." அவள் முடிக்கவில்லை. உச்சிமயிரைக் கொத்தாய்ப் பிடித்துக் கொண்டு அவளைத் தூக்கினான். எப்படித் தான் அப்படியொரு ஆவேசம் வந்ததோ தெரியாது. துப்புக் கெட்டவளே தூ...! தூ!! அவளின் முகத்தில் காறித் துப்பினான். எத்தனை தரம் புத்திமதி சொன்னேன். கேட்டியா? அவள் முகத்தில் வழிந்த எச்சிலைத் துடைத்தபடியே "இல்ல பாலையா அவன் சாப்பாட்டைத் தரமாட்டானோ எனப் பயந்து தான்..." இப்படி அப்பாவித்

தனமாய்ச் சொல்பவளை என்ன தான் செய்ய முடியும். ஏசினாலும் புரியாது என்பதால் அவன் மனம் இளகிப்போனது. "என்னோடப் பேசக்கூடாது. எனக்குக் கிட்ட வரக்கூடாது. நீ எக்கேடு கெட்டாவது போ"

அவன் மூலையில் துண்டை விரித்துப் படுத்துவிட்டான். நீண்ட நேரமாய் அவள் மூக்கை உறிஞ்சி அழுத சத்தம் கேட்டது. அதன்பிறகு அவன் உறங்கிப்போய்விட்டான். விடிந்து அவன் எழுந்தபோது பரபரப்போடு எல்லோரும் வேடிக்கைப் பார்ப்பதுவும் ஏதோ பேசிக்கொண்டு போவதுமாக நகரம் அமர்க்களப்பட்டது. காரணம் அவன் படுத்திருந்த இடத்திலிருந்து சற்று தூரத்தில் பெரியதொரு புத்தர் சிலை திடீரென இரவோடிரவாக முளைத்திருந்தது. இந்த வேடிக்கையைப் பார்க்க முடியாதபடி பாலையாவின் மனதில் புதிய வேதனை ஒன்று சூழ்ந்துகொண்டது. காந்தியை கண் விழித்ததிலிருந்து அவன் காணவில்லை. எங்கும் இருப்பதாகவும் தெரியவில்லை. அவளின் உடமைகள் மட்டும் அப்படி அப்படியே கிடக்க அவள் மட்டும் எங்கே போயிருந்தாள். பாலையா தனக்குத் தெரிந்த இடமெல்லாம் தேடிப்பார்த்துவிட்டான். அவளைக் காணவில்லை. வழமை போல் சனநடமாட்டம், வாகனப் போக்குவரத்து என நகரம் களைகட்டத் தொடங்கிவிட்டது. வருவோர் போவோருக்கு புத்தர் சிலை புதினப் பொருளாகிப் போனது. ஆட்டோத் தரிப்பிடத்தில் புத்தர் அமர்ந்து கொண்டதால் அது மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் இடம் மாற்றப்பட்டிருந்தது. சிலவேளை காந்தி சில்வாவைத் தேடிப் போயிருப்பாளோ என்ற நப்பாசையில் பாலையா வாடிப்பக்கமாக நடந்தான். "இந்த மனுசன் எல்லாம் துறந்து போதி மரத்தின் கீழ்ப் போயிருந்தவராம். இவரைக் காவல் போட்டு ஊத்தைக்குள் இருத்தி வைத்திருக்கிறார்கள்." ஆட்டோச் சாரதியொருவர் பக்கத்தில் போட்டிருந்த காவல் அரணையும் சேர்த்துக் குத்தலாகச் சொன்னது பாலையாவின் காதில் விழுந்தது. நேர் எதிரே நின்று பாலையா புத்தர் சிலையை நிமிர்ந்து பார்த்தான். முன்னால் கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் சின்னச்சாமி பாவம் வல்லமை குறைந்தவரோ. இவர் இருக்கும் போது நிம்மதியாய் இருந்தேன். இந்தப் பெரியசாமி வந்ததுமே எனது சந்தோஷமே போய்விட்டதே. இவர் பொல்லாத சாமியோ என்ற கேள்வி அவனுள் எழுந்தது.

அன்று மாலைவரையும் அவளைக் காணவில்லை. "காந்தி! நான் உன்னை அடிச்சது பிழை, அதுக்காக என்னைய இப்படி விட்டுட்டுப் போறதா புள்ள. நீ இல்லாம என்னால வாழமுடியாது. எங்க இருந்தாலும் வா புள்ள. புத்தி குறைஞ்ச உன்னை அடிச்ச நான்தான் முட்டாள்." அவன் அழுதபடியே புலம்பிக் கொண்டு அலைந்தான். அந்தச் சூழல் காந்தியைப் பிரிந்ததால் பாலையாவை வருத்தியது. அவன் ஒரு கிழமையாக அந்த இடத்தை விட்டுத் தூர இடத்திற்குப் போயிருந்தான். காந்தியின் நினைவு அடிக்கடி வந்து துன்புறுத்தினாலும் மனம் சற்று அமைதியடைந்து இருந்தது. இப்பொழுது திரும்பி வந்திருப்பாள். போய்ப் பார்ப்போம் என்ற ஆவலுடன் வந்தவனுக்கு அவ்விடத்தை அணுக முடியாதபடி கம்பிவேலி இராணுவக் காவல். புத்தர் சிலையைச் சுற்றிவர மட்டுமில்லால் மாடிக் கட்டிடங்களின் மேலும் கீழும் முழத்துக்கு முழம் துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினரைப் பார்த்தபோது பாலையாவிற்குத் தன்னுடைய அனைத்து இழப்புகளையும் விட இனந்தெரியாத கவலையும் குழப்பமும் சேர்ந்து கொண்டது. "கும்பிடும் தெய்வத்தையும் துவக்கு முனையில் இருத்தி வைக்கக்கூடிய வல்லமை இவங்களுக்குத் தானிருக்கு." யாரோ ஒரு பெரியவர் ஆத்திரத்தோடு சொல்லிக் கொண்டு போனது பாலையாவின் காதில் விழுந்தது. எல்லாம் வெறுத்த நீ ஏன் அப்பா என்ர சந்தோஷத்தைக் கெடுத்தாய்? பாலையா புத்தர் சிலைக்கு முன்னால் போய் நின்று ஏதேதோ பேசினான். என்ர இருப்பிடம்.... ஆறுதலாய் இருந்த ஒரே ஒரு துணை எல்லாமே பறிச்சுப் போட்டாய். அவனால் துக்கத்தை அடக்க முடியவில்லை.

நீண்ட நேரமாய் பாலையாவின் செயலைக் கவனித்துக் கொண்டிருந்த இராணுவ வீரன் அவனருகே துப்பாக்கியை நீட்டிக் கொண்டு வந்தான். " அய்.... யண்ட... யண்ட...." கோபத்தோடு அவன் சொன்னது அவனுக்கு விளங்காவிட்டாலும் போகச் சொல்கிறான் என்பதைப் புரிந்தவனாய்த் திரும்பி நடந்தான். தேநீர்க் கடையில் வானொலியில் இருந்து "உந்தன் தேசத்தின் குரல் தொலைதூரத்தில் அதோ...." என்ற பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. உண்ணிப்பாகக் கேட்ட பாலையா வாய்விட்டு சத்தமாக அழத்தொடங்கினான். அந்தப் பிச்சைக்காரன் இருந்த இடம் பறிபோய் விட்டது. அதுதான் அழுகிறான். அவனோட திரியும் அந்தப் புத்தி குறைஞ்ச பெட்டை செத்துப் போச்சுது அதுதான் அழுறான், பல காரணங்கள் சொன்னார்கள். பலர் அவனைச் சுற்றிக் கூடிவிட்டார்கள். பாலையா அவர்கள் சொன்ன காரணத்திற்காக மட்டும் அழவில்லை. நிமிர்ந்து பார்த்தான் கடல்... வள்ளங்கள்... தொடுவானம் ஒன்றுமே தெரியவில்லை. முன்னால் முள்ளுக்கம்பியும், இராணுவத்தினரின் துப்பாக்கிகளும் தான் தெரிந்தன. கொஞ்சம் தலையை நிமிர்த்தியவன் "கோணேசா..... நீ! நீ!! எங்கேயும் போய் விடேல்லையே" முகத்தில் அறைந்து கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான்.

*நன்றி : 'ஞானம்' செப். 2005, இலங்கை.*

# • Best Foods •

# Supermarket

## Over 500 Items at reduced price 15.12.05 - 15.01.06

259 - 261 London Road
West Croydon
Surrey CRO 2RL
020 8684 6269

364 - 366 Bath Road
Hounslow
Middlesex TW4 7HT
020 8577 6002

249 Northholt Road
South Harrow
HA2 8HN
020 8423 9933

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், பொங்கல், புதுவருட நல்வாழ்த்துக்கள்

**Dear Customer**

**To help you spend less this Christmas and into the New Year, we're giving you money-off coupons to use in store.**

**Season's Greetings**

## £ 50.00 off

**When you spend over £ 100.00 on Cloths**

**Valid**
**15.12.05 - 15.01.06**

Name :
Address :
Tel No Pin Code :
E mail :

## SET OF EARRING FREE

**When you spend over £ 300.00 On Jewellery**

Name :
Address :
Tel No Pin Code :
E mail :

## £ 9.99 off [Pongal Pot Free]

**When you spend over £ 50.00* On Foods**

* Except - Rice, Oil, Cigarettes, Spirits, Phonecards and product listed Inside

**Valid**
**15.12.05 - 21.12.05**

Name :
Address :
Tel No Pin Code :
E mail :

## £ 7.00 off

**When you spend over £ 50.00* On Foods**

* Except - Rice, Oil, Cigarettes, Spirits, Phonecards and product listed inside

**Valid**
**21.12.05 - 28.12.05**

Name :
Address :
Tel No Pin Code :
E mail :

## £ 7.00 off

**When you spend over £ 50.00* On Foods**

* Except - Rice, Oil, Cigarettes, Spirits, Phonecards and product listed inside

**Valid**
**28.12.05 - 05.01.06**

Name :
Address :
Tel No Pin Code :
E mail :

## £ 7.00 off

**When you spend over £ 50.00* On Foods**

* Except - Rice, Oil, Cigarettes, Spirits, Phonecards and product listed inside

**Valid**
**05.01.06 - 12.01.06**

Name :
Address :
Tel No Pin Code :
E mail :

Subject to availability

# SPECIAL OFFERS




Subject to availability

Offers from 15.12.05 to 15.01.06

# Buy 2 - Get 1 Free




Subject to availability

Offers from 15.12.05 to 15.01.06

# SPECIAL OFFERS




5 FOR £ 1.00

BUY ANY 4
FOR £ 1.00







3 FOR £ 1.00

6 FOR £ 1.00







எமது
பொங்கல்
பரிசு

£9.99

2 FOR £ 1.50






5 FOR £ 1.00

BUY ANY 4
FOR £ 2.00




Subject to availability

Offers from 15.12.05 to 15.01.06

# SPECIAL OFFERS




1 Kg 79 p

1 Kg 79 p




3 FOR £ 1.00




99 P







2 FOR £ 3.00

3 FOR £ 1.00




79 P







59 P

Subject to availability


Offers from 15.12.05 to 15.01.06



SPECIAL OFFERS
89p lb
£1.96 kg
69p lb
£1.52 kg
49p lb
£1.08 kg
59p lb
£1.31 kg
4 for £1.00
49p lb
£1.08 kg
3 FOR
£3.00
FRESH FROZEN
IDDLY
7 for
£5.00
£13.99
MARTELL
£15.99
CHIVAS REGAL
3 for £5.00
LION
LAGER
£9.99
BELL'S
Subject to availability
Offers from 15.12.05 to 15.01.06



வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நத்தார், புதுவருட
நல்வாழ்த்துக்கள்
JK Gold House
&
Fashion House
314-316 London Road Croydon
Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677


நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
மங்கையரின்
மனம்
கவரும்
பொன்னகை
கொட்டிக்
கிடக்கிறது...
JK Gold House
&
Fashion House
314-316 London Road Croydon Surrey CR0 2TJ Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677

# அறிவாய் நெஞ்சே

– முதற்சித்தன் –

கருவாகத் தோன்றிவளர்த் துருவ மாவாய் !
கருவியது கழன்றுவிட்டால் கனவாம் நெஞ்சே !
உருவமதைக் கண்டுதானே மயங்கு மிந்த
உலகத்தில் உளத்துயர்வு காண்பாய் நெஞ்சே !
கருவமதை விட்டுவிட்டுக் கள்ள மின்றி
கலங்காமல் கவலையின்றி வாழ்வாய் நெஞ்சே !
குருவாக ஏற்கும்முன் தகுதி காண்பாய்
குணமற்ற கொள்கையரை ஏற்காய் நெஞ்சே !

விழுவதோ வினைக்குழியில் நெஞ்சே! நல்ல
வினையினையே செய்திடுக ! தீமை யில்லை !
பழுதாகிப் பயனின்றித் தேகம் போகும் !
பேய்மனமே ! பண்பாலே தேகம் வாழும் !
சூழுகின்ற காலத்தில் சுகமாய் வாழ
சூதொடுபொய் களவுகளைச் சுட்டுப் போடு !
வாழுகின்ற காலத்தில் அளவ றிந்தால்
வாய்ப்பதெல்லாம் இன்பமன்றி பிறிது யில்லை !

இனிதாக்கு வாக்கினையே இன்பம் கூடும் !
இகழ்வினையும் புகழ்தனையும் சமமாய் நோக்கு !
பணிவான பழக்கத்தை ஒழுக்க மாக்கு !
பதரான மனிதர்களின் நேசம் நீக்கு !
துணிவாக்கு நெஞ்சத்தில் ! அன்பைக் கூட்டு !
தூயதமிழ்ச் சொல்லுக்கு நிகராம் வாழ்க்கை !
கனிவாக்கு நெஞ்சத்தை ! பந்த பாச
கட்டான பற்றுக்கும் பற்று இல்லை !

மரப்பசுவின் முலையதனிற் பாலுண் டாமே ?
மலடிக்கு மழலையினால் மகிழ்ச்சி போமோ ?
தூரத்தறியா தண்ணீரால் தாகம் போமோ ?
தண்ணீர்ப் பாம்பிடத்தே மணியு முண்டோ ?
உரமற்ற உடலாலே செயலும் ஆமோ ?
உள்ளத்தில் பணிவின்றி உயர்வும் ஆமோ?
சுரக்காத அன்போடு அறத்தைச் செய்தால்
சுகமில்லை மனதுக்கு அறிவாய் நெஞ்சே !

வளரும்

# திராவிடத்துள் சிவலிங்கம்



" ஒரு சமயத்திற்கு மட்டுமே உரித்தாகாமல் அனைத்துச் சமயங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுமை உடையது ". (1) என டாக்டர் வ.ஆ. தேவசேனாதிபதியாரால் பாராட்டப்படும் சிவலிங்கம் ஏராளமாக கிடைத்துள்ள " சிந்துவெளிப்பண்பாடு திராவிடப்பண்பாடு என்று பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் ". (2)

" திராவிட நாகரிகம் சுமேரியர் வாழ்ந்த மெஸபதேமியாவுக்குச் சென்றது. பாபிலோனிய நாகரிகமும் மற்றும் பிற நாகரிகங்களும் அதனிடத்தினின்றும் தோன்றின ". (3)

திராவிடரும் சுமேரியரும் ஒரே இனத்தவரே என்பதைக் குறித்து ஆராய்ச்சியாளர் பலர் ஒருமுகமாகக் கூறியுள்ள கருத்துக்களைக் காண்போம்.

" தற்காலக் கருத்துப்படி, கடல்வழியாகவும் தரைவழியாகவும் தமிழர்கள் மெஸபதேமியப் பள்ளத்தாக்கில் மிகப் பழங்காலத்திலேயே குடியேறிய அப்பகுதிகளில் சுமேரிய நாகரிகத்தைத் தோற்றுவித்தனர் என்கிறார் HR. ஹால் என்பவர். சுமேரிய இனத்து மக்களின் சிலைகளும், ஓவியங்களும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளினின்றும் முற்றிலும் வேறுபட்டதாய் இருப்பதுடன், அவர்களது மொழி, செமித்திய, ஆரிய அல்லது பிற மொழிகளினின்றும் வேறுபட்டதாய் இருக்கின்றது. அவர்கள் ஐயத்திற்கு இடமின்றி இந்திய இனத்தினரின் மாதிரியாகவே உள்ளனர். இப்பொழுது இந்தியாவில் உள்ள ஒரு சராசரி இந்தியனின் முக அமைப்பு, 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திராவிடப் பழங்குடியினரின் முக அமைப்போடு சிறிதும் ஐயத்திற்கு இடமின்றி ஒத்திருக்கின்றது.

இந்தியாவின் இத்தகைய திராவிட இனத்தவரோடு சுமேரியர்கள் பெரும்பான்மையும் ஒத்துள்ளார்கள். இதனை அவர்களது எழுத்துமூலச் சான்றுகளினின்றும் அறியலாம். (இப்பொழுதும் திராவிட மொழிகளையே பேசிக் கொண்டிருக்கும்) தக்காணத்திலுள்ள தென்னிந்தியரைப் போன்றே அவர்கள் பெரிதும் உள்ளனர். சுமேரியர் என்பவர் இந்தியப் பழங்குடியினரே என்பதும், அவர்கள் கடல் வழியாகவும் நிலவழியாகவும் பெர்சியாவின் வழியாக இரண்டு ஆற்றுப்பள்ளத்தாக்குகளுக்கும் சென்றிருப்பவர் என்பதும் நடந்திருக்க கூடாததொன்று அன்று. இந்த வாக்கியத்திலுள்ள கடல், நிலம் என்ற சொற்களுக்கு, அவர் தமது அடிக்குறிப்பில், தற்போது பலுசிஸ்தானத்தில் திராவிட மக்கள் பிராஹூ யினராக உள்ளனர் என்றும், தென் பெர்சியாவில் திராவிட இனத்தவர் இருப்பதாக அறியப்பட்டுள்ளது என்றும் தென்பெர்சியாவில் ஆரியரல்லாத பழங்குடியினரும் (கிரேக்கரின் அனாரியாக்கி என்ற பிரிவினர்) அதே திராவிட இனத்தாரோடு ஒத்திருப்பதோடு, பாபிலோனியாவையும் இந்தியாவையும் இணைக்கின்றனர் என்றும் கூறுகின்றார்.

ஹால் எழுதிய 'பழங்காலத்தின் நேர்ச்சான்றுகள்'என்ற புத்தகம் வெளியிடப்பட்ட 12 ஆண்டுகட்குள், ஹரப்பா, மொகஞ்சதாரோவில் செய்த ஆராய்ச்சிகளின் பயனாக அவருடைய கொள்கைகள் பொருத்தமானது என்பதும், அவர் பார்வையில் எவையெல்லாம் 'நிகழக்கூடியவையாக' இருந்தன என்று குறிப்பிட்டாரோ அவை உண்மையாகவே நிகழ்ந்தவையாக இருக்கின்றன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் கூறியபடி எழுத்துக்களின் படியுருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அதிகமான வரலாற்றுச் சின்னங்களும் வெளியாக்கப்பட்டன... செம்மையற்ற கரடுமுரடான வேலைப்பாடமைந்த சில சிற்பங்களும், பழைமையான உருவங்களும் மொஹஞ்சதாரோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 'மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மூக்கும், களிமண்ணால் செய்யப்பட்ட தட்டையான குமிழிகளான கண்களும்' மெசப்பதேமியாவிலுள்ள மிகப் பழங்காலச் சிற்பங்களின் உருவங்களை ஒத்துள்ளன.

சிந்துவெளிக்கும் சுமேரியாவிற்கும் இடையே தொடர்பு இருந்திருக்குமானால், இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் தென்னிந்தியாவிற்குமிடையே உறுதியாக மிகப்பெரிய அளவில் தொடர்பு இருந்திருக்கும். சேஸ் என்பவரால் இரு உண்மைகள் இதற்குச் சான்றாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஒன்று "ஊர்" என்ற இடத்திலுள்ள சிதவடைந்த தேக்கு மரம். இந்த "ஊர்" என்னுமிடமே கி.மு 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுமேரிய அரசர்களின் தலைநகரமாகும். மற்றொன்று, பாபிலோனியத் துணிவகைகளுள் சிந்து, மஸ்லின் போன்ற வார்த்தைகள் காணப்படுவதாகும். மஸ்லின் என்ற வார்த்தை பெர்சியா வழியாக மெசப்பத்தேமியாவிற்குச் சென்றிருக்க முடியாது என்பதை மஸ்லின் (Muslin) என்ற வார்த்தையிலுள்ள 's' என்ற எழுத்து நிரூபிக்கின்றது. எப்படியெனில் பெர்சியர்களின் மாதங்களில் 's' என்ற எழுத்து 'h' ஆக மாறியிருக்கும். இந்த நாட்டின் பெயரும் (sind) சிந்து நதியிலிருந்தே (hind) ஹிந்துவாக மாறி பெயரிடப்பட்டுள்ளது. எனவே இதிலிருந்து மஸ்லின் என்ற வார்த்தை தமிழ்க்கடற்கரையிலிருந்து நேராகப் பெர்சியக் கடற்கரைக்குச் சென்றிருக்குமென்று நான் கருதுகிறேன். பாபிலோனிய வார்த்தையான மஸ்லினுக்குப் பதிலாக 'சிந்து' என்ற வார்த்தையும் ஆற்றின் பெயரிலிருந்து பெறப்பட்டிருக்காது (அவர் கூறியது போன்று). ஆனால் பழைய திராவிடச்சொல் 'சிந்தி' என்ற வார்த்தையிலிருந்தே பெறப்பட்டிருக்கும் 'சிந்து' என்ற வார்த்தை இப்பொழுது துளுவிலும், கன்னடத்திலும் உள்ளது. இதன் பொருள் 'துண்டுத்துணி' என்பதாகும். தமிழில் கொடியென்ற பொருளில் 'சிந்து' என்ற சொல்லாகக் குறிக்கப்படுகின்றது. (4)

"கி.மு 4000 ஆண்டுகட்கு முன்பே பண்டைத் தமிழர் சிறந்த கடல்வழிப் பயணிகளாகவும், உலகச் சுற்றுநராகவும், நீண்டநாள் பிரயாணம் மேற்கொள்பவராகவும் இருந்தனர். சுமேரியாவிற்குத் தமிழர் வருகை தந்துள்ளனர் என்பது சுமேரியாவிலுள்ள நகரமொன்றிற்கு ஊர் (Ur) என்ற பெயர் இருப்பதிலிருந்து பெறப்பட்டதாகும். மொழியியல் சார்ந்த

தொல்பொருள் ஆராய்ச்சியின் மூலம் பல தமிழ்ச் சொற்கள் சுமேரியாவில் பயன்படுத்தப்படுவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-டு) பானை (Pot), நாள் (Day), ஏர் (Plough), கொல்லன் (Iron Smith), உழவன் (Tiller), தச்சன் (Carpnter), ஆயன் (Priest). God என்பது தமிழில் கடவுள் (Kadavul) பழந்தமிழில் இயவுள் எனப்படும். இதனை சுமேரியர்கள் தொகுத்து இயா (Eya) என்கின்றனர். தமிழில் இயவு என்பது வழியையும் மனிதருக்கு நல்வழியைக் காட்டுகின்ற இறைவனையும் குறிக்கின்றது. (5)

"ஆப்கானிஸ்தானம் ஈரான் மேட்டுநிலம், யூப்ரடீஸ் டைக்ரிஸ் நதியின் சமவெளிகள் ஆகிய இடங்களிலும் பொதுவாக மெசப்படேமியாவில் வழங்குகிற பல ஊர்ப்பெயர்கள் திராவிட மொழி உருவங்களை ஒத்திருக்கின்றன. அந்தப் பகுதிகளில் வரலாற்று காலத்துக்குமுன் வாழ்ந்தவர்களும் ஆரிய இனத்தையோ செமிட்டிக் இனத்தையோ சேராதவர்களும் ஆகிய மக்கள் திராவிட மொழி பேசினார்கள் என்று அறிஞர்கள் முடிவுசெய்திருக்கிறார்கள். ஹுரியன் மொழியும் காசைட்டு மொழியும் திராவிட மொழியோடு தெளிவாக எடுத்துக்காட்டக்கூடிய இயல்புடையவைகள்". (6)

திரு. ஜான் மார்ஷல் என்பவர் "சுமேரிய முத்திரைகளில் மொஹஞ்சதாரோவில் காணப்படுவதைப் போல் உயரமான காளை, அமர்ந்துள்ள குரங்கு, போர் புரியும் வீரன், திரிசூலத்தோடு சிவன் ஆகியவை காணப்படுவதோடு சிதைந்த சிவன் கோவில்களும் காணப்படுவதை தமது ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். சுமேரியா என்ற வார்த்தை 'சு-மேரு' என்ற வார்த்தையிலிருந்தே பெறப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் பெரிய மேரு இறைவனின் இருப்பிடமாகக் கருதப்படுகிறது.

திரு. கல்யாணராமன் என்பவரும் சுமேர் என்ற வார்த்தை 'சு-மேரு' என்பதிலிருந்தே பெறப்பட்டிருக்கும் எனக் கருதுகின்றார். இச்சுமேரியர் செமித்திய இனத்தவர் அல்லர். இவர்கள் இந்தியர்களின் வழித்தோன்றல்களே. இவர்கள் ஏறக்குறைய கி.மு 3500ல் அவ்விடத்தில் குடியேறியவர்களே. மேலும் சிலர் பழமையான இலெமூரியாக் கண்டத்தினின்றும் குமிரிக்கண்டத்தினின்றும் சென்றுள்ளனர். மற்றும் பெருவெள்ளம் காரணமாகத் தமிழர் பலர் மத்தியாசியாவை நோக்கி படகின் மூலம் சென்றனர். சிலர் எகிப்தின் மேற்குப் பகுதிக்கும் ஆபிரிக்காவுக்கும் சென்றனர். இத்தமிழர்கள் தங்கள் பண்பாட்டையும், பழக்கவழங்களையும் சுமேரியாவிற்கு எடுத்துச் சென்றனர். தமிழில் மேருமலை சிவனின் இருப்பிடமாகக் கருதப்படுகிறது. மற்றும் தமிழகத்தில் மேருமலை என்று ஒன்று உள்ளது. தமிழர்களைப் போன்றே சுமேரியர்களுக்கும் திங்களை (lunar) அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக் குறிப்பேடு உண்டு".(7)

"ஊர் என்னுமிடத்தில் 'மலைமகள்' என்று வழங்கிய இறைவியை மக்கள் வழிபட்டார்கள். அந்தக் கடவுளுக்கும் நிலாக் கடவுளுக்கும் ஆண்டு தோறும் அங்கு திருமண விழா நடைபெற்றது. கடவுளைத் தாயாக வழிபடும் அந்த மரபிற்கும், பார்வதியை (மலைமகளை) பல்வேறு வடிவங்களில் இந்திய மக்கள் வழிபடும் மரபிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. பண்டைய சுமேரியாவில் இருந்த கோயில்களில் நடைபெற்ற வழிபாட்டு முறைகளுக்கும், தென்னிந்தியாவில் இன்றுவரை வழக்கில் இருக்கும் வழிபாட்டு முறை, கோயிலின் அமைப்பு முறை ஆகியவற்றிற்க்கும் பல ஒற்றுமை இருக்கின்றன." (8)

மேற்கண்டவைகளிலிருந்து திராவிட நாகரிகம் சுமேரியர் வாழ்ந்த மெசப்படேமியாவிற்குச் சென்றது என்பதும், பாபிலோனியா நாகரிகமும் மற்றும் பிற நாகரிகங்களும் அதனிடத்தின்றும் தோன்றின என்பதும் பெறப்படுகின்றது.

எனவே திராவிடரும் சுமேரியரும் ஒரே இனத்தவர் என்ற ஆராச்சியாளரின் கருத்துக்கள் உண்மையானவைகளாகவே காணக்கிடக்கின்றன.

சுமேரியரின் தலைநகராகிய 'ஊர்' என்ற இடத்திலிருந்தே ஆபிரகாம் அல்லது இப்ராகிம் என்பவர் கி.மு. இரண்டாயிரத்தில் புறப்பட்டுக் கானான் தேசத்தைச் சென்றடைந்தார் என விவிலியம் கூறுகிறது. (ஆதி 11:31; யோசு 24:2-15).

இவர் கிறிஸ்தவ சமயம் தோற்றக் காரணமான இயேசு கிறிஸ்து பிறந்த யூத குலத்தைத் தோற்றுவித்த இஸ்ரவேலருக்கும், இஸ்லாமிய சமயத்தை தோற்றுவித்த முகமது நபியைப் பெற்றெடுத்த இஸ்மவேலருக்கும், ஏதோமியர் போன்ற வேறு பல குலங்களுக்கு ஆதி முன்னோனாக விளங்குகின்றார்.

இந்த ஆபிரிக்கரின் சந்ததியரான யூதர்களின் திருமறையான பழைய ஏற்பாட்டை உருவாக்கிய போது, ஆதியாகமம் என்ற பகுதியில் கூறியுள்ள படைப்பு, வெள்ளப் பெருக்கு போன்ற கதைகளை, அவர்கள் பாபிலோனிலிருந்தே பெற்றுள்ளனர் என விவிலிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

"பழைய ஏற்பாட்டுப் பாரம்பரியக் கதைகளில் பலவும் - படைப்பு, பிரளயம் - பாபேல், எகிப்து, கானான் ஆகிய அண்டை நாடுகளைச் சார்ந்து காணப்படாது பாபிலோனிய பிராந்தியங்களைச் சார்ந்து காணப்படுகின்றன".


1. வ.ஆ. தேவசேனாதிபதி - சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகள்- சென்னை பல்கலைக்கழகம்- 1997 பக்.9.
2. இரா. நாகசாமி - தமிழ் எழுத்துக்கள் - கல்வெட்டியல் - தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு - 1980 - பக் 10.
3. குமார ஸ்வாமிஜீ - வீர சைவம் - கீழைமேலை நாடுகளின் மெய்ப் பொருளியல் வரலாறு - மொழிபெயர்ப்பு - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1970 பக் 722.
4. P.T. Srinivas Iyengar- History of Tamils - Asian Educational Service - 1982 P. 36-39.
5. V.G. Ramachandran - Siva Around The World - see (5) 1983 P.34, 35.
6. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி - தென்னிந்தியா வரலாறு (முதல் பகுதி) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் - 1973 பக். 102
7. V.G. Ramachandran – Siva Around The World - see (5) 1983 P. 34, 35.
8. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி - தென்னிந்திய வரலாறு (மு.ப.) பார்க்க (6) பக்கம் 103.
9. ஞான இராபின்சன் - 13, இஸ்ரவேலரின் வரலாறு - திருமறைத்தோழன் - A Copmanion To The Bible - கிறிஸ்தவ அறையியல் நூலோர் குழு - 1972 - பக் 114.


- நன்றி: " திராவிட சமயம்"- மலர் : 1 இதழ்: 4 ஆகஸ்ட் : 1

# நீரிழிவுக்கு நிரந்தர நிவாரணம்

நீரிழிவு என்கின்ற சர்க்கரை நோயில் இரண்டு வகை உண்டு. ஒன்று டயாபெட்டிஸ் மெலிட்டஸ் (Diabetes Mellitus) மற்றது டயாபெட்டிஸ் இன்சிபிடியஸ். (Diabetes Insipidius) டயாபெட்டிஸ் என்ற கிரேக்க வார்த்தைக்கு கடந்து செல்லுதல் (To pass through) என்று பொருள். மெலிட்டஸ் என்ற வார்த்தைக்கு இனிப்பு-சர்க்கரை என்று பொருள். சர்க்கரை நோய் என்பது சர்க்கரை கலந்த திரவம் நமது உடலில் கடந்து செல்கிறது என்பதே.

நாம் உண்ணுகிற கொழுப்பு, புரதச் சத்துக்கள், மாவுப் பொருட்கள் முதலானவை சேமிக்கப்பட்டும், செரிக்கப்பட்டும், ஆற்றலாய் வெளிப்பட உடலில் உள்ள ஹார்மோன்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. நமது உடலில் உள்ள சர்க்கரைச் சத்தை சரியான அளவில் கட்டுப்படுத்தி வைக்கவும், அதை சரியானபடி உபயோகிக்கவும், இன்சுலின் என்ற ஹார்மோன் தேவைப்படுகிறது. நமது உடலிலுள்ள கணையம் என்னும் சுரப்பி இந்த இன்சுலினை உற்பத்தி செய்கிறது. இந்த இன்சுலின் சுரப்பது தடைப்பட்டாலோ அல்லது குறைவாக சுரக்கப்பட்டாலோ இரத்தத்தில் சர்க்கரையின் அளவு மிகைப்படுகிறது. இரத்தத்தில் சர்க்கரை வெறும் வயிற்றுடன் இருக்கும்போது 100 மி.லி கிராம் இரத்தத்தில் 80 முதல் 100 மில்லி கிராம் அளவு இருப்பது இயல்பானது. சாப்பிட்டு இரண்டு மணி நேரத்துக்குப் பின் இரத்தப் பரிசோதனை செய்யும்போது 100 மி.லி இரத்தத்தில் 140 முதல் 160 மில்லி கிராம் இயல்பானது. 180 மில்லி கிராம் அளவுக்கு மேல் இருந்தால் சர்க்கரை அளவு அதிகமாகிவிட்டது என்று பொருள்.

### உடலினுள் இன்சுலின் உற்பத்தியாகும் விதம்

நீரிழிவின் ஆரம்ப நிலையில் இரத்தத்தில் மட்டும் சர்க்கரை மிகுந்து காணப்படும். இரத்தச் சர்க்கரை அளவு 180 மில்லி கிராமுக்கும் அதிகமாகிப் போனால் இந்த அதிக சர்க்கரை அதிக நீருடன் வீணாகிறது.

### யாருக்கு வரும் ?

இந்த நோய் வருவதற்கு வயது வேறுபாடு இல்லை. பிறந்து குழந்தைகளுக்குக்கூட வரலாம். Juvenile Diabetes என்பர் இதனை.

இளம் வயதினருக்கு இன்சுலின் சுரப்புத்தடையால் நீரிழிவு நோய் ஏற்படலாம். இது இன்சுலின் சார்ந்த நீரிழிவு (Insulin Dependent Diabetes Mellitus) இன்சுலின் ஊசி தேவை.

இரண்டாவது வகை நீரிழிவு நோய் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், வயது முதிர்ந்த நிலையிலும் வரலாம். பெண்களுக்கு வாய்ப்புகள் அதிகம். பருமனான உடல் வாகு உள்ளவர்களிடமும், உடலுழைப்பு இல்லாதவர்களிடமும் இனவேறுபாடின்றி நீரிழிவு நோய் அதிகமாகக் காணப்படுகிறது. மெலிந்த உடல் வாகு உடையவர்களிடம் நீரிழிவு மிக அரிது. பரம்பரை 40 சதவிகிதமே இதில் பங்கு வகிக்கிறது. முன்னோர்களுக்கு அல்லது குடும்பத்தில் மிக நெருங்கிய சொந்தக்காரர்களுக்கு நீரிழிவு நோய் இருந்தால் சந்ததிகளுக்கு நீரிழிவு நோய் வரவும் அதிக வாய்ப்பு உண்டு. தாய்க்கோ தந்தைக்கோ இருந்தால் பிள்ளைகளுக்கும் வரும் வாய்ப்பு அதிகமாகிறது. பெற்றோர் இருவருக்குமே நீரிழிவு நோய் இருப்பின், பிள்ளைகளுக்கும் வரும் சாத்தியக் கூறுகள் மிகமிக அதிகம். 40 வயதுக்கு மேல் வரும் நீரிழிவு நோய் இன்சுலின் சாராத நீரிழிவு என்று கூறப்படுகிறது. (Non Insulin Dependent Diabetes Mellitus) இவர்கள் முறையான உணவுப் பழக்கம் மருந்து ஆகியவற்றைக் கொண்டு நோயைக் கட்டுப்படுத்தி வைக்க முடியும்.

### எதனால் ஏற்படுகிறது ?

சிறு வயதில் புட்டாளம்மை மற்றும் சில நோய்கள் - சிலவகை மருந்துகளின் பின் விளைவுகளாலும், சில இராசயனப் பொருட்கள் கலந்த உணவு வகைகளாலும், அடிக்கடி குழந்தை பெற்றெடுத்தல், பெருந்தீனி தின்னுதல் போன்ற காரணங்களாலும் நீரிழிவு நோய் தோன்றுகிறது. ஆஸ்த்துமா நோய்க்கு சிகிச்சை எனக் கொடுக்கப்படும் ஸ்டீராய்டு (Steroids) மருந்துகளால் நன்றாக இருப்பவர்களுக்குக் கூட நீரிழிவு வர வாய்ப்புண்டு. இரத்த அழுத்தத்திற்கும், தைராய்டு சுரப்பிக் கோளாறுகளுக்கும் சில ஆங்கில மருந்துகளைக் கொடுக்கும்போது அவை இரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகப்படுத்தி நீரிழிவு நோயை உண்டாக்கலாம். சிறு குழந்தைகள் குண்டாவதற்காக சில ஆங்கில மருத்துவர்கள் ஸ்டீராய்டு கொடுக்கிறார்கள். இதனாலும் தொந்தரவுகள் பிறகு வர வாய்ப்புள்ளது. இவற்றிற்கெல்லாம் அதாவது மருந்துகளால் வரும் நீரிழிவிற்கு Drug Induced Diebetes என்று பெயர். மேலும் அதிக பதற்றம், தீராத மனக்கவலை, மன அழுத்தம், மன உளைச்சல் போன்ற காரணங்களாலும் சர்க்கரை மிகைப்படுகிறது. இதற்கு Stress Induced Diabetes என்று பெயர்.

கணையத்தில் கல் ஏற்படுவதால் ஒரு வகை நீரிழிவு வருகிறது. இது பரம்பரையாக வருவதில்லை. இதற்கான முழுமையான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. Fibro Calculose Diabetes Mellitus என்று இதற்கு பெயர். ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இவ்வகை நோயாளிகள் அதிகம் இருக்கிறார்கள். கேரளாவில் உள்ளவர்கள் அதிகமாகச் சாப்பிடும் ஒருவகைக் கிழங்கில் (மரவள்ளி) நீரிழிவை ஏற்படுத்துவதற்கான இராசாயனப்

பொருட்கள் உள்ளன. இது Type - 1 என்று கூறப்படுகிறது. கருவுற்ற காலத்தில் ஏற்படும் சர்க்கரை நோய் Gestational Diabetes எனப்படும். இந்த நோய் ஏற்பட்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தை குண்டாக இருக்கும். பிரசவ காலத்தில் முன் நீர் சேர்க்கை அதிகமாகி பிரசவம் சிரமமாகலாம். கருவுற்றிருக்கும் போதே நீரிழிவு உள்ளதா என்பதனைப் பரிசோதனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் கருவிலேயே நீரிழிவு நோய் உருப்பெறலாம். தாய்க்கு நீரிழிவு இருந்தால் கருச்சிதைவு ஏற்படலாம். ஊனமுற்ற குழந்தையும் பிறக்கலாம்.

### அறிகுறிகள்

அதிகமாக அகோரப்பசி. ஆனால் எவ்வளவு சாப்பிட்டாலும் எடை கூடாது. அதிக தாகம். அடிக்கடி சிறுநீர் கழிப்பது. வாய் உலர்ந்து போதல். இரவில் தூக்க நேரத்தில் அடிக்கடி சிறுநீர் கழிக்க எழுந்திருத்தல். புண் ஏற்பட்டால் ஆறாத நிலை, உடல் மெலிவு, காரணம் தெரியாத உடல் சோர்வு, உடல் வலி முதலியவைகளாகும்.

### உணவுக் கட்டுப்பாடு

சர்க்கரை நோய்க்கென்று தனிப்பட்ட உணவு வகைகள் கிடையாது. அது அவசியமற்றதும்கூட. சர்க்கரை நோயுள்ளவர்கள எதையும் அளவறிந்து சாப்பிடலாம். ஒவ்வொரு பொருளிலும் உள்ள கலோரி அளவை அதற்கேற்ற அளவு உண்ணலாம். உணவைக் குறைத்து பிரித்துச் சாப்பிடவேண்டும். சற்று கூடிவிட்டால் அதிக தூரம் நடந்தோ, உடற்பயிற்சி செய்தோ கலோரி அளவை குறைக்க வேண்டியது அவசியம். பொதுவாக நீரிழிவு உள்ளவர்கள் மிகவும் அதிக இனிப்பான பொருட்களைத் தவிர்க்கவும். பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள், சேர்த்துக்கொள்ளலாம். வெள்ளரிக்காய், தக்காளி, நீர்ப்பூசனி, முட்டைக்கோஸ், புடலங்காய், வெங்காயம், பாகற்காய், பீர்க்கங்காய், அகத்திக்கீரை, தண்டுக்கீரை, முருங்கை, மனத்தக்காளி, டர்னிப், முள்ளங்கி, நூல்கோல், எலுமிச்சை, பப்பாளி, சீதாப்பழம், தர்பூசனி, வறுத்த கடலை, புழுங்கல் அரிசி, கோதுமை, ராகி, உளுந்து, துவரம் பருப்பு, பாசிப்பருப்பு முதலியவற்றை அதிக அளவு சேர்த்துக் கொள்ளலாம். அவரவர்களுடைய உடலமைப்பு மற்றும் தொழிலுக்கு ஏற்றவாறு உணவை சாப்பிடலாம். உடல் பருமனானவர்கள் கொழுப்புச்சத்துள்ள உணவு வகைகளைக் குறைக்க வேண்டும்.

### நீரிழிவினால் ஏற்படும் பாதிப்புகள்

சர்க்கரையைத் தேடி எறும்புகளும், ஈக்களும் வருவது போல, நீரிழிவு நோயாளிகளைத் தேடி வந்து பல நோய்கள் பதம் பார்க்கும். நீரிழிவு நோய்க்குத் தகுந்த சிகிச்சை இல்லாமல் இருந்தால் ஊரில் எந்த நோய் வந்தாலும் நீரிழிவு நோய் உள்ளவர்களைத் தேடிச் சென்று சேரும். பாதிக்கும் நீரிழிவு நோய் காரணமாக நரம்புத் தளர்ச்சி எதிர்பாராத மயக்கம் அல்லது நினைவிழப்பு (கோமா), கண்ணின் பார்வை குறைதல் அல்லது முற்றிலும் இழத்தல், சிறுநீரகம் சிறிது சிறிதாகப் பாதிப்பு அல்லது திடீர் செயலிழப்பு, இதயத்தில் இரத்த அழுத்தம், இரத்த ஓட்டக் குறைவு, மாரடைப்பு, மூளையைத் தாக்கி பக்கவாதம், அல்லது திடீர் பாலுணர்ச்சி இழப்பு அல்லது ஆண்மைக் குறைவு போன்றவை ஏற்படும்.

உடலில் உள்ள எல்லா உறுப்புகளையுமே நீரிழிவு நோய் பாதிக்கும். இளமையிலேயே முதுமைத் தோற்றத்தை ஏற்படுத்திவிடும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் கால் பகுதியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். காலில் உணர்வு மரத்திருப்பதால் காயம் ஏற்பட்டால் தெரியாது. தெரியாமல் ஏற்பட்ட காயம் ஆறாது. புண் புரையோடி காலையே நீக்கவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இதனால் காலைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வது நல்லது. உயரத்திற்கு ஏற்ற எடையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். நடைப்பயிற்சி நல்லது. உடைகளும் காலணிகளும் இறுக்கமாக இல்லாமல் இருத்தல் நல்லது. காயங்களோ, புண்ணோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தண்ணீர் அதிகமாக அருந்தலாம்.

### கண்டுபிடித்தல் :

நீரிழிவு நோய் தானாக வெளிப்படுவது இல்லை. வேறு நோய்க்கு இரத்தப் பரிசோதனை செய்யும்போதோ மாஸ்டர் செக் அப் செய்யும்போதோ, சோர்வு, திடீரென எடைக் குறைப்பு, மயக்கம், அதிகப்பசி, தாகம், அடிக்கடி சிறுநீர் போதல், தோலில் நோய்கள் என்று மருத்தவரிடம் செல்லும்போது செய்யப்படும் பரிசோதனையில் நீரிழிவு நோய் கண்டுபிடிக்கப்படுகிறது.

### டயாபெடிஸ் இன்சிபிடியஸ்
### (Diabetes Insipidius)

இதுவும் சர்க்கரை நோய்க்குரிய அறிகுறிகளைக் கொண்டது. ஆனால் இது சர்க்கரை நோய் அல்ல. இந்த நோய் வருவது மிக மிக அரிது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நோயில் இரத்தத்திலும், சிறு நீரிலும் உப்பின் அளவு அதிகமாகும். ஆனால் சிறுநீரில் சர்க்கரை அதிகம் இருக்காது. தலையில் அடிபடுவதாலோ தலையில் செய்யப்படும் அறுவை சிகிச்சைக்குப் பிறகோ இந்த வகை நோய் ஏற்படலாம். எலும்பில் ஏற்படும் புற்றுநோய்க் கட்டி போன்ற கட்டியாலும் இந்த நோய் வரலாம். இவர்களுக்கு காக்கை வலிப்பும் வரலாம். மூளை நரம்புகளும் பாதிக்கப்படலாம். இந்த நோயும் எந்த வயதிலும் வரலாம். இவ்வகை நோய் உள்ளவர்கள் உப்பின் அளவைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

### ஹோமியோ சிகிச்சை

ஹோமியோபதி மருத்தவத்தில் நோயைக் குணப்படுத்துவதற்கான - அதாவது கட்டுப்பாட்டில்

**டாக்டர் ப.உ. லெனின் BHMS, MD**

வைத்திருப்பதற்கான அணுகுமுறை மிகவும் மாறுப்பட்டது. வேறுபட்ட, புதுமையான கருத்துக்களைக் கொண்டது ஹோமியோபதி மருத்துவம். நோய் என்பதனை அடிப்படையாகக் கொள்ளாமல் நோயினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதருடைய உடல் நிலையையும், மன நிலையையும் கருத்தில் கொள்கிறது. இங்கு நோய் என்பது போய், நோயாளி என்பவரே முன்னிலையில் இருக்கிறார். இதுவே வெவ்வேறு நோயாளிகளுக்கு - அதாவது நோய் என்பது சர்க்கரை வியாதியாக இருந்தாலும், நோயாளி வேறுபடும்போது மருந்துகளும் வேறுபடுகின்றன. முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும் என்பதே இம்மருத்துவத்தின் தன்மை. இம்மருத்தவத்தின் சிறப்பு இளம் வயதினர், குழந்தைகள், 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், வயது முதிர்ந்தவர்கள், பெண்கள் மற்றும் சில வகைகளில் நோயாளிகள் பிரிக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு தனிப்பட்ட நோயாளியிடமிருந்தும் நோய்க்காண காரணங்களைக் கேட்டறிந்து, கண்டுபிடித்து, மருந்துகளை இம்மருத்தவத்தில் கொடுக்க வேண்டியுள்ளது. நீரிழிவுக்கு என்று பொதுவான ஒரு பத்து மருந்துகளை வைத்துக் கொண்டு அனைவரையும் குணப்படுத்த முடியாது. இது சரியான மருத்துவ வழியும் அல்ல. ஸ்டீராய்டு (Steroid) போன்ற மருந்துகளால் வந்த நோயாக இருந்தால் இதற்கான மருத்துவ முறைகள் மாறுபடுகின்றன. Stress Induced ஆக இருந்தால் மன பயம், மன உளைச்சல் போன்ற கோளாறுகளையும், கணக்கில் எடுத்துக்கொண்டு உடலுக்கென மருந்துகளை மாற்றி, மாற்றிக் கொடுக்க வேண்டும். பொதுவாகச் சொல்லப்போனால் எந்தக் காரணத்தினால் நீரிழிவு ஏற்பட்டாலும்

1. வெறும் சர்க்கரை நோய் மட்டும் உடையவர்கள் (எந்த வயதினராக இருந்தாலும் பரவாயில்லை)
2. சர்க்கரை நோயோடு, ஆஸ்த்துமா, இரத்த அழுத்த உயர்வு, அல்சர், மூலம் போன்ற நாட்பட்ட நோய் உள்ளவர்கள்.
3. பரம்பரையாக சர்க்கரை நோய் உள்ள குடும்பம்.
4. ஆங்கில மருத்தவம் மற்றும் வேறு மருத்துவ முறையில் மருத்துவம் பார்த்து, சரிவரவில்லை அல்லது உடலுக்கு ஒத்துக்கொள்ளவில்லை என்று ஹோமியோபதி மருந்துகள் சாப்பிட வருபவர்கள்.
5. கருவுற்ற காலத்தில் சர்க்கரை நோய் உள்ளவர்கள்.

என நோயாளிகளை தனித் தனியாகக் கவனித்து அவரவர்க்கு ஏற்ற மருந்துகளைக் கொடுக்கும்போது நோய் குணமாகிறது. சிலர் எவ்வளவுதான் சொன்னாலும் உடற்பயிற்சியே இல்லாமலும், உடல் எடையை அதிகமாக வைத்துக்கொண்டும், கொழுப்பு மிகுந்த உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டுக்கொண்டும் இருப்பார்கள். இவர்களுக்கு வீரியம் மிக்க மருந்துகளை தொடர்ந்து மாற்றி மாற்றிக் கொடுப்பதன் மூலம் இரத்தத்திலும் சிறுநீரிலும் சர்க்கரையின் அளவைக் குறைத்துக் கட்டுப்பாட்டில் வைக்க முடியும்.

வேறு சிலர் இரத்த அழுத்தம் தோல் நோய் போன்றவற்றிற்கு ஆங்கில மருந்துவம் பார்த்துக்கொண்டு தங்களுக்குள்ள சர்க்கரை நோய்க்கு மட்டும் குணப்படுத்திக் கொள்ள ஹோமியோபதி மருத்துவத்திற்கு வருவதண்டு. இது போன்று பல நோய் உள்ளவர்கள் படிப்படியாக அதாவது உடனடியாக ஆங்கில மருந்துகளை முற்றிலும் நிறுத்திவிடாமல், ஹோமியோபதி மற்றும் ஆங்கில மருந்துகளையும் சேர்ந்து சாப்பிட்டுக்கொண்டு, ஆங்கில மருந்துகளைக் குறைத்து, பிறகு முற்றிலும் நிறுத்திவிட்டு அனைத்துத் தொந்தரவுகளுக்கும் ஹோமியோபதி மருந்துகளை மட்டுமே சாப்பிடலாம். இதனால் ஆங்கில மருத்தவத்தால் ஏற்படும் பக்க விளைவுகளையும், உடல் சோர்வையும், அசதியையும் குறைக்க முடியும். தடுக்க முடியும்.

கருவுற்ற காலத்தில் ஹோமியோபதி மருத்துவ நிபுணர்களின் மேற்பார்வையில் கருவுற்ற பெண்கள் மருந்துகளை சாப்பிடும்போது அவர்களிடம் கருச்சிதைவை தடுக்க முடியும். பிறக்கப் போகின்ற குழந்தையின் அங்கக் குறைபாடுகளையும், பிறவிக் குறைகளையும் தடுக்க முடியும். கருவுற்ற பெண்களுக்கு இம்மருந்துகள் ஒரு வரப்பிரசாதமாகும். தாயையும், சேயையும் இம் மருந்துகள் ஒருங்கே தொல்லையிலிருந்து மீட்கின்றன. பின்னர் மறுமுறை கருவுறும்போது இதுபோன்ற தொல்லைகளிலிருந்து தப்பிக்க முன்கூட்டியே மருந்துகளை ஆலோசனையின் பேரில் சாப்பிடலாம்.

குடும்பத்தில் தாய்க்கும் தந்தைக்கும் இருவருக்குமே சர்க்கரை நோய் இருக்கும் நிலையில் பிறக்கின்ற குழந்தைக்கும் நீரிழிவு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதால், குழந்தை பிறந்த உடன் தக்க பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்துகளை குறிப்பிட்ட காலத்திற்கு கொடுப்பதன் மூலம் நோயின் அடுத்தடுத்த தொல்லைகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும். பொதுவாக ஹோமியோபதி

**நீரிழிவுக்காரர்களிடம் உறக்கம் தரும் தொந்தரவு...**

தூங்கும்போது இரத்தச் சர்க்கரைக் குறைவை உடலானது சமாளிக்கும் திறன் இடையூறுக்கு உள்ளாகிறது என்று ஆஸ்திரேலியாவில் பெர்த் நகரில் உள்ள மார்கரெட் இளவரசி சிறுவர் மருத்தமனை ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். நல்ல உடல்நலம் உடையவர்களுக்கு இது ஒன்றும் பெரிய சிக்கல் அல்ல. ஆனால் நீரிழிவுகாரர்கள் விஷயத்தில் கொஞ்சம் அபாயகரமான சிக்கல்கள் – திடீர் கை – கால் (உடல் தசைப்) பிடிப்புகள் உண்டாகும். நீரிழிவுகாரர்கள் இரவு நேரத்தில் இரத்தச் சர்க்கரைக் குறைவு (hypoglyceamia) உண்டாவது பற்றி மருத்துவரிடம் கேட்டு அறிய வேண்டும். மானிட்டர் சிகிச்சை தேவைப்படலாம். தூக்கத்திலுத் தொந்தரவு !

மருந்துகளை சாப்பிடுவதால் உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றல் பல மடங்கு அதிகரிக்கிறது. இதுவே நோயின் அப்போதைய தொல்லைகளிலிருந்தும், பின்னர் சிறிது நாட்கள் கழித்து வரும் விளைவுகளையும் தடுக்கிறது.

சர்க்கரை நோயினால் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் பாதிக்கப்படலாம் என்பதால் பாதிப்பின் எந்த நிலையில் இருக்கும் நோயாளியும் இம் மருந்துகளை முறைப்படி ஆலோசனையின் பேரில் சாப்பிட்டு வரலாம்.

சர்க்கரை நோயினால் ஏற்படக்கூடிய உடல் அசதிக்கும், சோர்வுக்கும், தளர்ச்சிக்கும் மிகச் சிறந்த மருந்துகள் உள்ளன. இதனால் பாலுணர்வு பாதிப்பும், ஆண்மைக் குறைவும் திடீரென்று ஏற்படுவதை தவிர்க்கவும், தடுக்கவும் முடியும்.

திருமணமாகி 35 வயதிற்கு மேல் ஆன ஆண்கள் ஆண்மைக் குறைவினால் தான் தங்களுக்குக் குழந்தை இல்லை என்று வரும்போது இரத்தத்திலும், சிறுநீரிலும் சர்க்கரையின் அளவை பரிசோதனை செய்ய வேண்டும். சர்க்கரை நோயினால் கூட சிலருக்கு பாலுணர்வு பாதிக்கப்பட்டு குழந்தைப் பேறு இல்லாமல் இருக்கலாம். காரணத்தைக் கண்டுபிடித்து மருந்துகளைக் கொடுப்பதன் மூலம் சர்க்கரை நோயையும், ஆண்மைக் குறைவையும், ஒருசேர குணப்படுத்தலாம். ஆனால் தொடர்ந்து முறைப்படி, குறிப்பிட்ட காலத்திற்கு மருந்துகளை சாப்பிடவேண்டும் என்பது அவசியம்.

நீரிழிவினால் ஏற்படக்கூடிய கண் பார்வை குறைதல், சிறுநீரகச் செயலிழப்பு, இதயத்தில் இரத்த அழுத்தம், இரத்த ஓட்டக்குறைவு, மாரடைப்பு, புண் மற்றும் ஆறாத காயங்கள், தோல் நோய்கள், மாதவிடாய்க் கோளாறுகள், உடல் அரிப்பு, உள்ளங்கை - கால் எரிச்சல், மரத்துப் போதல் போன்ற தொல்லைகளைத் தொடர்ந்து ஹோமியோபதி மருந்துகளை சாப்பிடுவதன் மூலம் குணப்படுத்தவும், தடுக்கவும் முடியும். டயாபட்டீஸ் இன்சிபிடியஸ் என்ற நோய்க்கும் இம்மருத்துவத்தில் மிகச் சிறந்த மருந்துகள் உள்ளன.

எளிய பக்க விளைவுகள் இல்லாத அறிவியல்பூர்வமான இம்மருத்தவமும், இம்மருந்துகளும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கின்றன. நோயாளிகளை வருத்தாத, அடுத்தடுத்த தொந்தரவுகளிலிருந்து மீட்கின்ற இம்மருத்துவம் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் உதந்தது.

நன்றி : நல்வழி

## உங்களுக்குத் தெரியுமா ?

1. உலகையே உள்ளங்கைக்குள் அடக்கும் அறிவியல் அதிசயம் கணிணியில் உள்ளது.
2. பொறுமையின் மறுபெயர் பெண்கள். அதனால்தான் பூமித்தாய், பூமாதேவி, கடல் அன்னை எனக் கூறுகிறார்கள்.
3. ஆற்றுநீர் வாதம் போக்கும், அருவி நீர் பித்தம் போக்கும், சோற்று நீர் இரண்டையும் போக்கும்.
4. தன்னைத் தானே கட்டுப்படுத்துவதைவிட மிகப் பெரிய வெற்றி வேறு ஒன்றுமில்லை.
5. நஞ்சு என்றாலும் நாலு வாய் மேய்வது வெள்ளாட்டின் குணம்.
6. நமது மனம் மென்மையாகவும், அமைதியாகவும் இருந்தால் மட்டும் போதாது. இதயமும் ஆர்வத்தால் நிறைந்திருக்க வேண்டும்.
7. கீர்த்தி சிறிது மூர்த்தி பெரிது என்பதுபோல் சில கோயில்கள் சிறிதாக இருந்தாலும் புகழ் பெற்று விளங்கும்.
8. நாலு சமையற்காரர் சேர்ந்து சமையல் செய்தால் அந்த சமையல் வாயில் வைக்க ஏலாது (ஆங்கிலப் பழமொழி)
9. உலகத்தில் மனிதனுக்கு அடுத்தபடியாக ஒரு உயிரினத்துக்கு பாஸ்போர்ட் இருப்பது பால்கன் பறவைகளுக்கு மட்டும்தான். ஒவ்வொரு வருடமும் 24 கோடி ரூபாய் மதிப்புள்ள பால்கன் பறவைகளை அரபு நாட்டு ஷேக் வாங்குகிறார்களாம்.
10. பெண்கள் விதவைகளாகவே இருக்கக்கூடாது, மறுமணம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தித் தனது முதல் திருமணத்தில் விதவைப் பெண்ணைத் திருமணம் செய்தவர் நபிகள் நாயகம் அவர்கள்.

திருமதி புவனம் தர்மரட்ணம்
லண்டன் (ஹரோ)



# தேமதுரம் வளர்த்த தாமோதரம்

**இணுவை ச. சிறீரங்கன்**

தமிழ் மொழியை தனது மூச்சாகவும், தமிழர் நலனைத் தன் பேச்சாகவும் கொண்டு செயற்பட்ட பெரியார் C.J.T தாமோதரம் ஐயா அவர்கள், சென்ற மாதம் மறைவெய்தினார். ' எப்படியும் வாழலாம் ' என்றில்லாது, இப்படித்தான் வாழவேண்டுமென்று ஓர் கோட்பாட்டை உள்ளடக்கி வாழ்ந்த பெரியார் தாமோதரம் அவர்கள், லண்டனில் ஒளிக்கீற்றாய்ப் பிரகாசித்தார்.

இங்கு பல தமிழர்கள் புலம் பெயர்வதற்கு முன்பே இவரது தமிழ்ப்பணி ஆரம்பமாயிற்று. விரல்விட்டு எண்ணக்கூடிய தமிழர்கள் வாழ்ந்த முப்பது வருட காலத்தில், அதாவது 1975ம் ஆண்டு காலப்பகுதியிலேயே இவர் தனது தமிழ்த் தொண்டை இங்கு ஆரம்பித்தார். அக்காலக்கட்டத்தில் லண்டனில் தமிழர்களை ஒன்று திரட்டுவதென்பது மிகவும் அசாத்தியமாகவேயிருந்தது.

நாடுவிட்டு நாடுவந்த தமிழர்கள் ஆங்கில மொழியை முற்றுமுழுதாகத் தழுவினால், அவர்கள் தாய்மொழி அவர்களை அறியாமலே கை நழுவிச் சென்றுவிடுமென்பதை அவர் நன்குணர்ந்தார். ஓர் மொழி அழிந்தால், அதனைப்பேசும் இனமும் அழிந்து விடுமல்லவா? தமிழர்கள் இங்கு வந்து தமது மொழியையும், கூடவே தமது கலாச்சாரம், பண்பாடு போன்ற விழுமியங்களையும் இழந்து, அடையாளமற்றுப்போய் விடக் கூடாதென்பதற்கு, முதலில் இவர் செய்த பணி ஓர் தமிழ்ப்பாடசாலையை இங்கு ஆரம்பித்ததேயாகும். 1978ம் ஆண்டு லண்டனில் GREENFORD என்னும் இடத்தில் தமிழ்ப் பாடசாலையொன்றினை நிறுவிய இவர், அதற்கு ' மேற்கு லண்டன் பாடசாலை ' என்று பெயருமிட்டார். இப்பாடசாலையானது, எத்தனையோ தமிழ்ப்பாடசாலைகள் பின்னர் உதயமாவதற்கு ஓர் விடிவெள்ளியாக அமைந்தது.

இங்கிருந்து எமது தாயகத்திற்கு சமூகப் பணிகளை மேற்கொண்டு, கரம் நீட்டும் நோக்குடன் 1977ம் ஆண்டில் பலருடன் இணைந்து 'SCOT' என்ற ஓர் அறக்கட்டளையை இவர் உருவாக்கினார். இந்த அறக்கட்டளை எமது தாய்நாட்டில் தமிழர் வாழும் பகுதிகளுக்கு வாரிவழங்கிய பங்களிப்புகள் எண்ணிலடங்கா.

இங்கு வதியும் ஈழத்தமிழரின் சிந்தனைகள், செயலாக்கங்கள் அவர்கள் சமூகப்பணிகள் என்பனவற்றை உலகறியச் செய்வதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டார்.

INTERNATIONAL TAMIL FEDERATION எனப்படும் சர்வதேச தமிழர் அமைப்பினை இவர் இங்குத் தோற்றம் பெறச்செய்தார். இதன் வாயிலாக சர்வதேசத் தமிழர்கள் ஒன்றுகூடவும், குலவவும் இவர் வழிசமைத்தார். வயது முதிர்ந்து, நோய்வாய்ப்பட்ட வேளையிலும். செயல்வீரனாகத் திகழ்ந்த இப்பெருமகன், தமிழ் எழுத்தாளர் அணிவொன்றையும் இங்கேற்படுத்தினார். தாமோதரம் ஐயா அவர்கள் என்றும் அணையா ஒளிவிளக்காகும்.


முதுமையின் பிடியில் சிக்கிய ஐயா அவர்கள் தனது 90வது வயதிலும், உடல் தளர்ந்தும், உளம் தளராது தமிழர் நலன், தமிழர் விடுதலை என்பன பற்றியே சிந்தித்தார். ஈழத்தமிழர் தமது சொந்த மண்ணில் சுதந்திரப் பறவைகளாய்ச் சிறகடித்துப் பறக்கவேண்டுமென்று அவர் கனவு கண்டார்.


பட்டதாரி ஆசிரியராக இவர் நீண்ட காலம் இங்கு பணியாற்றியபோதும், பின்னர் இளைப்பாறியபோதும் இலங்கைத் தமிழர் பிரச்சனைகளை ஆங்கிலேயருக்கும் ஏனைய வேற்று நாட்டவர்க்கும் எடுத்தியம்புவதில் முன்னின்றார். ' தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு ', என்ற கூற்றுக்கு இவர் செயல்வடிவம் கொடுத்து உழைத்தார்.

'' C.J.T '' என்று எல்லோர் இதயங்களிலும் இனிய நினைவை ஏற்படுத்திய இத்தமிழ்மகன், வானுறையும், தெய்வத்துடன் இன்று வைக்கப்பட்டுவிட்டார் !


கிறிஸ்தவரான இப்பெரியாரின் வேண்டுதற்படி, இவரது பூதவுடலை இவரின் குடும்பத்தவர் நல்லடக்கம் செய்யாது, எரியூட்டி தகனக்கிரியை செய்தனர். சிலவேளை, பஞ்சபூதங்களில் அறவே சங்கமமாகி விடவேண்டுமென்று இவர் நினைத்திருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது.


'' தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை '' - (பாரதிதாசன்)




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்



# மார்கழி மாதப்பலன் (டிசம்பர் 15 - ஜனவரி 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

**மேடம்** மேதாவிலாசம் உள்ளவர்களே ! தடைகள் உடைபடும். பணத்தட்டுப்பாடு நீங்கும். குழப்பங்கள் தீரும். உறவினர் பகை விலகும். ஸ்பெகுலேஷன் மூலம் பணம் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் வீண் குழப்பம் தீர்ந்து புது முதலீடுகள் செய்வீர்கள். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் வேலைப்பளு குறையும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். சொந்த ஊரிலிருந்து நல்ல செய்தி வரும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். ஒரு படி உயரும் மாதமிது.

**இடபம்** மனிதாபிமானிகளே ! சூரியன் பலவீனமாக இருப்பதால் கொஞ்சம் முன்கோபம் வந்து செல்லும். குடும்பத்தில் வாக்கு வாதங்கள் வந்தாலும் சுக்ர பலத்தால் கணவன் மனைவி உறவு பலப்படும். ஆடை, ஆபரணங்கள் வந்து சேரும். பிள்ளைகளுடன் இருந்த மோதல் போக்கு மறையும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். மனைவி வழி உறவில் செலவினங்கள் அதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்யோகத்தில் அதிகாரிகளின் பாராட்டு கிட்டும். தடை தாண்டி வெல்லும் மாதமிது.

**மிதுனம்** விவேகிகளே ! அங்காரக பலம் சிறப்பாக இருப்பதால் பேச்சில் கடுமை இருக்கும். துணிவான செயல்கள் எடுப்பீர்கள். வீட்டில் மருத்துவச் செலவுகள் உண்டு. அரசு விவகாரங்களில் நிதானம் தேவை. சகோதரர் உதவுவார். நிலம், வீடு வாங்கும் பணி நிறைவேறும். உத்யோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் போட்டிகள் கடுமையாக இருக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் சுபமாக முடியும். நிதானத்தால் வெற்றி பெறும் மாதமிது.

**கடகம்** சமயோசித புத்தி உள்ளவர்களே ! அரசால் அனுகூலம் உண்டு. எதிரிகளை வீழ்த்துவீர்கள். வழக்குகள் சாதகமாகும். வீடு, மனை விற்பது வாங்குவது சுலபமாக முடியும். ஆடை, ஆபரணம் சேரும். பிள்ளை பாக்யம் உண்டாகும். வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் பரிசு பாராட்டு உண்டு. விமர்சனங்கள் வேண்டாம். உடல்நிலை பாதிக்கும். வாகனச் செலவு அதிகமாகும். விவாதம் தவிர்த்தால் மகிழ்ச்சி கூடும் மாதமிது.

**சிம்மம்** ஆளுமைத்திறன் உள்ளவர்களே ! எதையும் நிதானமாக செய்யப்பாருங்கள். சிலர் உங்கள் மீது வீண்பழி சுமத்துவார்கள். மறைமுக எதிரிகள் அதிகரிப்பர். வீட்டில் கலகலப்பு வந்து போகும். செலவினங்கள் கூடும். முன் கோபம், அவசர முடிவுகள், அசைவ உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரம் சுமார்தான். வேற்று மதத்தினர் உதவுவார்கள். பெற்றோர் உடன் பிறந்தோர் உதவுவார்கள். உத்யோகத்தில் அதிகாரிகளின் பாராட்டு கிட்டும். சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டிய மாதமிது.

**கன்னி** விகடகவிகளே ! நினைத்த காரியங்கள் தடைபட்டாலும் முடியும். அலைச்சல், பணச் செலவு, சின்னச் சின்ன விபத்துகள், வாக்குவாதங்கள் என வந்தாலும் சமயோசித புத்தியாலும், சகிப்புத்தன்மையாலும் சரி செய்து விடுவீர்கள். பிள்ளைகள் நிம்மதி தருவார்கள். பூர்வீகச் சொத்தில் நல்ல மாற்றம் வரும். எதிர்பாராத வரவு வியாபாரத்தில் உண்டு. புது ஒப்பந்தம் கூடிவரும். உத்யோகத்தில் எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். வாகனவிபத்து நிகழக்கூடும். பதட்டத்தை தவிர்க்க வேண்டிய மாதமிது.

**துலாம்** கலையுணர்வு உடையவர்களே ! நீண்டகாலமாக இழுபறியாக இருந்த பல வேலைகள் இப்போது எளிதாக முடியும். குடும்பத்தில் நிலவிய கூச்சல் குழப்பம் நீங்கும். பணவரவு அதிகரிக்கும். பழைய கடனை பைசல் செய்வீர்கள். புது கடனுதவியுடன் புதுத் தொழில் தொடங்குவீர்கள். ஆபரணங்கள் வந்து சேரும். உத்யோகத்தில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் புது பங்குதாரர்களை சேர்ப்பீர்கள். தோல்விகள் தொலையும் மாதமிது.

**விருச்சிகம்** நீதிமான்களே ! ராஜ தந்திரத்தில் வெற்றியடைவீர்கள். கோபம் தணியும். பண வரவு அதிகரிக்கும். பயணங்கள் வெற்றி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. புது எண்ணங்கள் தோன்றும். தோல்விகள் விலகும். வியாபாரத்தில் நல்ல லாபம் உண்டு. மறைமுக போட்டியாளர்களை முறியடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரியின் ஆதரவு உண்டு. மகிழ்ச்சி தங்கும் மாதமிது.

**தனுசு** நியாயவாதிகளே ! சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். புதிய முயற்சிகள் வெற்றி உண்டு. மனக்குழப்பங்கள் விலகும். பிள்ளைகள் பொறுப்புடன் காணப்படுவார்கள். உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். ஆடை ஆபரணங்கள் சேரும். செலவினங்கள் அதிகமானாலும் அதற்கேற்ப வருமானம் கிடைக்கும் மாதமிது.

**மகரம்** பணவரவு தாராளமாக இருக்கும். பழைய கடன்களை பைசல் செய்வீர்கள். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். சுபகாரியங்கள் ஏற்பாடாகும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சில ஏற்பாடுகளை செய்வீர்கள். வியாபாரம் சுறுசுறுப்படையும். உத்யோகத்தில் சம்பளம் உயரும். மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். நல்லது நடக்கும் மாதமிது.

**கும்பம்** கொடையாளர்களே ! எண்ணங்கள் ஈடேறும். டென்ஷன், அலைச்சல் விலகும். முகத்தில் தெளிவு பிறக்கும். குடும்பத்தினரின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வீட்டிற்குத் தேவைப்படும் பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பணப்பற்றாகுறை இருக்காது. புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். மனநிம்மதி பெருகும் மாதமிது.

**மீனம்** ஆன்மீக அறிவாளர்களே ! மனச்சோர்வு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். வேலையாட்களும் ஒத்துழைப்பு தருவார்கள். கணவன் - மனைவி உறவு மகிழ்ச்சி தரும். வீட்டை விரிவுபடுத்துவீர்கள். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். உடல் நலம் சீராக அமையும். வெற்றி பெறும் மாதமிது

உ
சிவமயம்

Phone: (514)-487-6458
FAX: (514)-487-6459

2525 Cavendish - #1037
Montreal QC
CANADA H4B 2Y6

21-10-2005

திருவருள் முன்னிற்க, அன்பு மிக்க சோதி அவர்களுக்கு எழுதிக் கொள்வது. நீங்களும் பெருமான் கிருபையால் சுகமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் அனுப்பிய September, October மாதங்கள் தமிழர் தகவல் இரண்டும் கிடைத்தன.

பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் கையால் பொன்னாடை போர்த்தி "சிவம் பரப்பும் சீலர்" என்ற பட்டத்தை உங்களுக்கு தந்து கௌரவித்தார் என்ற செய்தியை படித்து பெருமைப்பட்டேன். தென் கயிலாயத்தைச் சேர்ந்த ஈழத்தின் இணையில்லாத தொண்டர் திரு. சிவானந்த சோதிக்கு இந்த விருது வழங்கியது ஈழக் கைலாயத்துக்குக் கிடைத்த பாராட்டாகும் என்று ஔவை நடராசன் எழுதி இருப்பது உங்கள் சேவைகளைத் தெரிந்தவர்களுக்குத்தான் விளங்கும்

அதிருக்க 425.00 ரூபா செலவு செய்து இந்த இரண்டு புத்தகங்களையும் அனுப்பவேண்டும் என்று என்ன நிர்ப்பந்தம் இருந்தது. எனது பிறந்த நாளுக்கு வந்து சேரவேண்டும் என்பதற்கா இவ்வளவு செலவு தேவையா? இப்படித்தான் சுடர் ஒளியும் செய்திருக்கிறது, எனது புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பைக் கொண்ட 10 இதழ்களை, ஒவ்வொன்றுக்கும் 96.00 ரூபா முத்திரை ஒட்டி, எனது பிறந்தநாள் October 18ம் திகதி எனக்குக் கிடைக்கும்படி செய்திருக்கிறார்கள். எனக்கு வயதும் 96, அவர்கள் ஒட்டிய முத்திரையும் 96.00 ரூபாவுக்கு. 10 இதழ்களுக்கும் ஆக மொத்தம் 960.00 ரூபா. இவையெல்லாம் தேவைதானா?

வை. நவரத்தினம்

அன்புடையீர், வணக்கம்! 29-11-2005

தம்பி 51 என்னும் கவிதை தமிழர் தகவல் மாத இதழுக்காகவே என்னால் எழுதப்பட்டது. பிறகு அதனை, தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் தென்செய்தி இதழிலும், என்னுடைய மாவீரர் நாள் நினைவு உரையிலும் நான் பயன்படுத்தினேன். அண்மையில் இலண்டனில் இருந்து வெளிவரும் ஒரு பேப்பர் என்னும் இதழில் அக்கவிதை வெளியிடப்பட்டுள்ளதாக அறிகிறேன். கவிதையை மறு வெளியீடு செய்வதில் பிழையில்லை. எனினும் அக்கவிதைக்கான தலைப்பு மாற்றப்பட்டிருப்பதும், தமிழர் தகவலில் இருந்து அக்கவிதை எடுக்கப்பட்டுள்ளது என்னும் செய்தியை வெளியிடாததும் முறையானது அன்று. எனவே இனி அக்கவிதையை அல்லது என் எழுத்துகளைப் பயன்படுத்த விரும்புவோர், அதனை முறையாகச் செய்திட வேண்டுகின்றேன்.

தோழமையுடன்,
**சுப. வீரபாண்டியன்**

# STARR ESTATES LIMITED

**ESTATE AGENS - VALUERS - SURVEYORS PROPERTY CONSULTANTS**

Advice and assistance on purchase of investment abroad including Europe, Middle East ( Dubai ) and Far East

- Sales
- Lettings
- Property Management
- Surveyors
- Valuations
- Mortgages
- Re-Mortgages
- Commercial Loans
- Buildings & Contents Insurance
- Life Insurance

**Please call us with your requirements**
**ADVICE ON FINANCIAL SERVICES**
**PROVIDED BY QUALIFIED ADVISORS**

CENTRAL PARADE
Station Road Harrow Middlesex HA1 2TW
Tel : 020 8427 5328
Mob : 07956 543 044 Fax : 020 8863 5705
Email : info@starrestatesltd.co.uk
Web : www.starrestatesltd.co.uk

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

# இந்திரா செபஸ்தியன் சட்டத்தரணிகள்

**1 Central Parade, Station Road, Harrow, Middlesex HA1 2TW**

## IMMIGRATION

குடிவரவு தஞ்சம் கோருவோர் விண்ணப்பம் (asylum)
கல்வி / தொழில் / உயரிர்தொழில்நுட்பம்
(work permits / HSMP / SEGS / SBS)
வியாபாரப்புலம்பெயர்தல் (Business / innovator / investor)
பிரித்தானிய பிரஜாதாவுரிமை
பிரித்தானிய – இலங்கை இரட்டை பிரஜாவுரிமை!
(Dual citizenship)
திருமண அனுமதி விண்ணப்பம்
ஐரோப்பியர்களின் இருப்பிட விண்ணப்பம், மற்றும் பிரித்தானியாவில் உறவின அகதிகள் Sponsor

## PROPERTY

கடை / வீடு வாங்கல், விற்றல்
வீடு–கடை உரிமையாளர்– குடியிருப்பாளர் பிணக்குகள்
வியாபாரஸ்தாபன குத்தகை On & Off licence

வியாபார பிணக்குகள் – ஒப்பந்தங்கள்
Business disputes & All types of Agreements

கம்பனி உருவாக்கம் – பிணக்குகள் –
பாங்ரப்ட் ( Bankruptcy )
சிவில் வழக்குகள்
குடும்பம் ( Family ) – தொழில் பிணக்குகள் ( Employment)
உயில் எழுதுதல்
Charity & Trust Related Work

## Intellectual Property / Information Technology

வியாபார இலச்சினை (Logo / Trade Mark)
எழுத்தாக்கம் – இசையாக்கம் (Copy rights)
வெப்சைட் – கொம்ப்யுட்டர்
விஞ்ஞான கண்டுபிடிப்புகள் (Patents)
...................பதிவுசெய்தல்

**Tel : 0208 427 3303 Fax : 0208 427 3313**

# வான்புகழ் கொண்ட வள்ளுவம்

## கலைஞர்

முன்னொரு காலத்தில் முடி மன்னன் ஒருவன் இருந்தான்
இன்னல் எதுவரினும் எள் முனைப் பொய்யும் இயம்பிடா
அரிச்சந்திரன் !

இல்லாத பொருளை எடுத்துக் கொடுப்பதாய்ச் சொல்லி
பொல்லாத விசுவாமித்திரனிடம் சிக்கிக் கொண்டான்

கன்னல் நிகர் பிள்ளைதனைக்
காட்டில் பாம்பு கடித்த போதும்,

கற்பு நிறை பெண்மணியாம்
சந்திரமதியாளை விற்றுவிட நேர்ந்த போதும்,

முனிவனிடம் வாக்களித்தவாறு பொன்னையும்
மணியையும்
தனியொருவனாக நின்று தந்தே தீருவதென்றும் -
அதற்கெனத்

தன்னையே சுடலை காக்கும் வேலைக்குத்
தயார் படுத்திக் கொள்வதென்றும்,

தானெடுத்த முடிவை
தயக்கமின்றி நிறைவேற்ற

தணல் சுடும் மயான பூமியில்
பிணம் சுடும் வேலையில் சேர்ந்தான்.

வெள்ளிக் காசு வழங்கிய கையால் -
கொள்ளிக் காசு வாங்கலாச்சே என

வருத்தம் கொண்டான் - சுடலையில்
விருத்தம் பாடினான் !

கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதிலே - பிறர்
தடுத்த போதும் தவறாமல் நின்று,

சத்தியம் பிறழா உத்தம புத்திரன் என உலகம்
சாற்றும் புகழுக்குத் தவங் கிடந்தான் !

நமக்கிதிலே சிரிப்பு வருவது என்னவென்றால்
நாட்டை ஆளவும் மக்கள் நலம் பேணவும்

தேவைப்படும் பொருளையெல்லாம்
திரட்டி வைக்கும் கருவூலத்தை

திருவோடு போல ஆக்கிவிட்டால்
தெருவில் பிச்சை எடுப்போனுக்கும்

தேசத்தை ஆள்வோனுக்கும் என்ன வித்தியாசம் ?
தினந்தோறும் தரித்திரம் தானே நாட்டை ஆளும் !

புலி வில் கயல் மூவேந்தர் சின்னமெனில் இந்தப்
புவி வேந்தன் சின்னமோ திருவோடாய்த் திகழ்ந்தது -

பாவம் ; பொய் சொல்லாப் புனிதன் என்று மன்னனுக்கு
மகத்தான பேர் தான் மிச்சம் !

பொது மக்களுக்கோ பசி, பஞ்சம், பட்டினி; அதனால்
பகற் கொள்ளை! பகிரங்க கொள்ளை உச்சம் !

நாடு, காடாயிற்று !
நாயகன் ; அரிச்சந்திரன் நடுத்தெருவில் நின்றான்.

நாடாளும் வேந்தர்க்கு மட்டுமல்ல;
வீடாளும் கணவன் மனைவிக்கும்

அளவறிந்து கொடுக்கின்ற ஒப்புரவாண்மை தேவை !
அல்லால் அளவின்றி வழங்கி, வளம் அழியும் என

அய்யன் வள்ளுவன் அச்சுறுத்திக் கூறியதை
அலட்சியம் செய்தாலோ அரிச்சந்திரன் கதைதான்
அனைவர்க்கும் நடக்கும்

அதன் பின்னரே கடவுளர்கள் காட்சி தருவர்;
கவலைகளை நீக்குவர் என்ற கற்பனைகள் மட்டுமே
தொடரும்.

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்

(தன்னிடமுள்ள பொருளின் அளவை ஆராய்ந்து
பார்க்காமல் அளவின்றிக் கொடுத்துக் கொண்டேயிருப்பதால்
அவனது வளம் விரைவில் கெடும்)

அதிகாரம் : 48 குறள் : 480

# மாவீரர் நாள் உரை

(27.11.2005 அன்று, தமிழ் ஈழத் தேசியத் தலைவர் ஆற்றிய உரையின் சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன)

சுயநல இன்பங்களைத் துறந்து பொதுநல இலட்சியத்திற்காகப் போராடி வாழ்ந்து, அந்தச் சத்திய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிய உத்தமர்களை நாம் நினைவு கூரும் புனித நாள்.

இன்றைய நன்னாளில், அந்த மகத்தான மனிதப் பிறவிகளின் நினைவாக நாம் ஏற்றும் தீபங்களில், அந்த அக்கினி நாக்குகளின் அபூர்வ நடனத்தில், எமது மாவீரர்களின் சுதந்திரத் தாகம் அணையாத சுடராக ஒளிவிட்டு எரிவதை நாம் எமது நெஞ்சில் நினைவு கொள்வோமாக.

எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது மாவீரன், எனது பிரியமான தோழன் சத்தியநாதன் எனது மடியில் உயிர்நீத்து இன்றுடன் இருபத்துமூன்று ஆண்டுகளாகக் காலநதி ஓடிவிட்டது. இந்தக் கால நீட்சியிற் கட்டவிழ்ந்த போராட்ட வரலாற்றில் பதினேழாயிரத்துத் தொள்ளாயிரத்து மூன்று (17,903) மாவீரர் தேச விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். இந்தப் பெருந்தொகைப் போராளிகளைவிடப் பலமடங்கு தொகையில் பொதுமக்களும் எதிரியாற் கொன்றொழிக்கப்பட்டுள்ளார்கள். ஒட்டுமொத்தத்தில் எமது தேசத்தின் விடுதலைக்காக நாம் கொடுத்த உயிர்ப்பலி மிகப் பெரியது. அளப்பரியது.

தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காகத் தமிழ் மக்கள் புரிந்துள்ள மாபெரும் தியாகத்தை, அதன் ஆன்மீக மகத்துவத்தை, அதன் வரலாற்று முக்கியத்துவத்தைச் சிங்களத் தேசம் மட்டுமன்றிச் சர்வதேசச் சமூகமும் உணர்ந்து கொள்ளாதது எமக்கு ஏமாற்றத்தையும் வேதனையையும் தருகிறது.

அன்றும் சரி, இன்றும் சரி, தமிழரின் உணர்வுகளை, அவர்களது வாழ்நிலை அவலங்களை, அவர்களது தேசிய அபிலாசைகளைச் சிங்களப் பெரும்பான்மை இனம் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ள எத்தனிக்கவுமில்லை. புரிந்து கொள்ளும் ஆற்றலும் அறிவுத் திறனும் ஆன்ம பக்குவமும் அவர்களிடம் இருப்பதாகவும் தெரியவில்லை.

சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து நீதி கிடைக்கப்போவதில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து, எமது உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டும் என உறுதிபூண்டிருந்தபோதும் தவிர்க்கமுடியாத வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாகச் சிங்கள அரசுடன் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்ற நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். பிரதேச வல்லரசான இந்தியாவின் தலையீடு ஒரு கால கட்டத்திலும், சர்வதேச நாடுகளின் அழுத்தம் இன்னொரு கட்டத்திலுமாகச் சமாதான முயற்சிகளில் எம்மை ஈடுபடச் செய்தன. அத்தோடு பேச்சுக்களில் நாம் பங்குபற்றியதற்கு வேறு காரணங்களும் இருக்கவே செய்தன.

சமாதானப் பேச்சு என்பது எமது விடுதலைப் போராட்டப் பாதையில் வைக்கப்பட்ட பொறி என்பதையும் நாம் நன்கு அறிவோம். இத்தனையையும் தெரிந்தும் நாம் நேர்மையுடனும் நேரிய நோக்குடனும் சமாதானப் பாதையில் பயணித்தோம். ஆயினும் நாம் மிகவும் விழிப்புடனும் விவேகத்துடனும் செயற்பட்டோம்.

எமது விடுதலை இயக்கம், திம்புவில் தொடங்கிப் பல்வேறு கட்டங்களில், பல்வேறு சமாதான முயற்சிகளிற் பங்கு பற்றியபோதும் இம்முறையே எமது போராட்ட வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஒரு நீண்ட கால இடைவெளியை - கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகால இடைவெளியைச் சமாதானத்திற்கு நாம் அர்ப்பணித்தோம். இந்த நீண்ட கால விசாலத்தில் எமது மக்களின் பிரச்சினைகளுக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் அயராது மேற்கொண்ட முயற்சிகள் அனைத்துமே அர்த்தமற்றுப்போயின.

சமாதான முயற்சியில் எதையுமே சாதிக்காது ரணிலின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதனையடுத்து, சமாதானத்திற்கு விரோதமான இனவாத சக்திகளுடன் கூட்டுச்சேர்ந்து புதிய அரசை அமைத்தார் சந்திரிகா. நாம் ஏற்கெனவே முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம்பற்றிப் பேசுவதற்கு எமது இயக்கம் இணக்கம் தெரிவித்தபோதும் சந்திரிகா அதற்கு இணங்காது காலத்தை இழுத்தடித்தார்.

சிங்கள ஆட்சியாளரின் நயவஞ்சக அரசியலுக்கு நல்லதொரு எடுத்துக் காட்டாக இன்னொரு பாரதூரமான விடயத்தையும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். சமாதானத்தின் திரைக்குப் பின்னால், மறைமுகமாக, எமது இயக்கத்திற்கு எதிராக நிகழ்த்தப்படும் ஓர் இரகசிய யுத்தம் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். எமது விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, எமது போராட்டத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்குடன் இந்த நாசகார நிழல் யுத்தம் ஏவிவிடப்பட்டது.

எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள், முக்கிய போராளிகள், ஆதரவாளர்கள் எமக்கு ஆதரவான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் என்ற வகையில் பெருந்தொகையானோர் மிகவும் கோழைத்தனமாகக் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். இந்த நிழல் யுத்தத்தின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது எமக்கு நன்கு தெரியும். இராணுவப் புலனாய்வுத் துறையின் வழிநடத்தலில் இந்த வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபோதும் இதன் பின்புலத்திற் சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அரூப கரங்கள் செயற்படுவதையும் நாம் அறிவோம்.

போருக்கு ஓய்வு கொடுத்ததால் உருவாகிய சமாதானச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி, ஒரு வித்தியாசமான மென் தீவிர யுத்தம் எம்மீது தொடுக்கப்பட்டிருக்கிறது. போர்நிறுத்த விதிகளுக்கு அமையத் தமிழ்க் கூலிப் படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடு. இந்த முக்கிய கடப்பாட்டை நிறைவுசெய்யத் தவறிய சிங்கள அரசு, இந்த ஆயுதக் குழுக்களையே கருவிகளாகப் பயன்படுத்தி எமது விடுதலை இயக்கத்திற்கு எதிராக வன்முறையை ஏவிவிட்டிருப்பது ஒரு பாரதூரமான போர்க் குற்றமாகும். ஒரு கையால் அரவணைப்பது போல நடித்து மறுகையால் குத்தும் நம்பிக்கைத் துரோகச் செயலிது.

சமாதானம், போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன எல்லாம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அர்த்தமற்ற சொற்பதங்களாக, யதார்த்த மெய்ந்நிலைக்குப் பொருந்தாத வார்த்தைப் பிரயோகங்களாக மாறிவிட்டன.

எமது சுயநிர்ணயப் போராட்டப் பயணத்தில் நாம் இன்று ஒரு தீர்க்கமான வரலாற்றுத் திருப்புமுனையை அடைந்துள்ளோம். தென்னிலங்கை அரசியல் அதிகார வர்க்கம் தமிழரின் சுயநிர்ணய உரிமையை என்றுமே அங்கீகரிக்கப் போவதில்லை. சிங்களப் பௌத்தப் பெரும்பான்மை மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டத்திலும், அந்தச் சட்டத்தின் அத்திவாரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆட்சியமைப்பிலும் தமிழினத்தின் சுயநிர்ணயத்திற்கு என்றுமே இடமிருக்கப் போவதில்லை. நாமாகவே போராடி, எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்பதை எமது மக்கள் இன்று உணர்ந்து விட்டார்கள். சுயநிர்ணயம் என்பதே சுயமாக, சுதந்திரமாக, மற்றவர்களின் தலையீடின்றி, எமது அரசியல் வாழ்வை நாமாகத் தீர்மானிப்பதுதான். அந்தக் காலமும் சூழலும் இப்போது கனிந்துவிட்டது.

சிங்களத்தின் அரச அதிபரைத் தீர்மானிக்கும் வாக்குப் பலம் இருந்தபோதும் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்த எமது மக்கள் விரும்பவில்லை. வேட்பாளர்கள் மீதான தனிப்பட்ட விருப்பு வெறுப்பாகவோ அவர்களது கட்சிகள், கொள்கைகள் மீதான தீர்ப்பாகவோ இதனைக் கருதுவது தவறு. ஒட்டுமொத்தமாகச் சிங்கள ஆட்சியமைப்பில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆழமான விரக்தியினதும் நம்பிக்கையீனத்தினதும் வெளிப்பாடாகவே இத்தேர்தற் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது.

அரச அதிபர் மகிந்தாவின் சிந்தனைகளையும் கொள்கைகளையும் நாம் நன்கறிவோம். தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அவரது அரசியல் தரிசனத்திற்கும் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் மத்தியிலான இசைவற்ற இடைவெளிகளையும் இணங்காத முரண்பாடுகளையும் நாம் அறிவோம். இவைபற்றி நான் இங்கு ஒப்பீட்டு மதிப்பாய்வு செய்ய விரும்பவில்லை.

சிங்கள இராணுவ ஆதிக்கத்திலிருந்து எமது தாயக நிலத்தின் பெரும் பகுதியை நாம் மீட்டெடுத்து, அங்கு தன்னாட்சி அதிகாரமுள்ள ஆட்சியமைப்பை நிறுவி, அதனை நேர்த்தியாக நிர்வகித்து வருகிறோம் என்பது இன்று உலகறிந்த உண்மை. பெருந்தொகை மக்கள் வாழும் நிர்வாகக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் அதனைக் கட்டிக்காக்க பலம்பொருந்திய படைத் துறையையும் சட்டம் ஒழுங்கைப் பேணக் காவல்துறையையும் நீதித்துறையையும் அத்தோடு ஒரு நிழல் அரசாங்கத்திற்குரிய அடித்தளக் கட்டுமாணங்களையும் கொண்டதாக பிரமாண்டமான நிர்வாக அமைப்பை நாம் இயக்கி வருகிறோம்.

பெரும் தொகையான எமது மக்கள் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த போதும், உணர்வாலும் இலட்சியத்தாலும் அவர்கள் எமது விடுதலை இலட்சியத்திற்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள்.

எமது போராட்ட இலட்சியத்தை அடையும் அணுகுமுறை குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய காலத்தை நாம் நெருங்கிவிட்டோம். இந்த வரலாற்றுத் திருப்புமுனையான கட்டத்தில், எமக்கு ஒரு புதிய சவாலாக, சிங்களத் தேசத்தில் ஒரு புதிய அரச அதிபரின் தலைமையில், ஒரு புதிய அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளது. இந்தப் புதிய அரசு எமக்கு நேசக் கரம் நீட்டுகிறது. எமது விடுதலை இயக்கத்துடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவிக்கிறது. போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து அமைதி பேணப் போவதாகச் சொல்கிறது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒரு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்து வருகிறது. ஜனாதிபதி மகிந்தாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட சிந்தனைகளை ஆழமாக அலசிப் பார்க்கும் பொழுது தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளையோ அதன் மூலக் கோட்பாடுகளையோ அவர் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. கொள்கை ரீதியாக எமக்கும் அவருக்கும் மத்தியிலான இடைவெளி மிகப்பெரிது. எனினும் அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுவதால், சமாதான வழிமுறையை எவ்விதம் கையாளப் போகிறார் என்பதையும், தமிழ் மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப் போகின்றார் என்பதையும் முதலில் நாம் அறிந்து கொள்வது அவசியம். ஆகவே, ஜனாதிபதி ராஜபக்சாவின் நகர்வுகளை, அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சிறிது காலம் நாம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவு செய்துள்ளோம்.

பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து, விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே, வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள், எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்தி செய்யும் வகையில், ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான, உறுதியான, அவசர வேண்டுகோளாகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, கடும்போக்கைக் கடைப்பிடித்து, காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்.

எமது மாவீரர்களின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வையும், எமது மண்ணின் விடுதலைக்காக அவர்கள் புரிந்த மகத்தான தியாகங்களையும் நினைவுகூரும் இப்புனித நாளில், எத்தகைய இடர்களையும் எத்தகைய துன்பங்களையும் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்போமென உறுதிபூணுவோமாக.

" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் "

# தூது

## தமிழ்த் தூதர் தவத்திரு தனிநாயம் அடிகளார்

இது அரசியல் தூது அல்ல. ஆட்சிகளுக்கு ஆலவட்டம் தூக்கிய தூதுமல்ல. தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அதனால் தமிழை வளர்த்துக்கொண்டு தானாகவே தன்னை அதற்காக அர்ப்பணித்துக் கொண்ட தூது இது. ''என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறு'' என்ற திருமூலரின் திருவாக்கினைத் தாங்கித் தரணி எங்கும் தமிழ் தெளித்த தன்னிகரல்லாத ''தமிழ்த்தூது'' எங்கள் தவத்திரு தனிநாயகம் அடிகளார்.

இயற்கையாய் அமைந்த கூர்மையான அறிவு. கண்டார் விரும்பும் தோற்றப்பொலிவு, நெறிமுறைகள் நன்கு ஆராய்ந்த கல்வியின் மேன்மை இவைகள்தான் தூதுக்கு அடையாளம் என்றால் கலாநிதி சேவியர் ஸ்ரனிஸ்லொஸ் தனிநாயகம் அடிகளார்தான் அதன் உதாரணமாகிறார். அவரது தோற்றம் 02.08.1919 தீவகத்தில் கரம்பொன் கிராமத்தில் நடந்தது. அவரது 15வது வயதில் குருத்துவப் பாடசாலையில் மாணவராகிவிட்டவர் அவர். உலக வாழ்வன இன்பதுன்பங்களைத் துறந்த அவர் இறுதிவரை தமிழைத் துறக்கவே இல்லை. அவர் துறவியானாலும் மிகவும் தற்றுணிவுடையவர். அதற்கு ஒரு உதாரணம் ; 1956 யூன் 15ந் தேதி காலிமுகத்திடல் தமிழர் சத்தியாதிரகத்தில் பங்கு கொண்டமை. அதில் அவர் குருத்துவ வெள்ளாடையுடனேயே கலந்து கொண்டார். இதன் பிரதிபலிப்பே பின் நாளில் அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவியிலிருந்து வெளியேறக் காரணமாயிற்று. அதன் பின் லண்டனில் கலாநிதிப்படிப்பை மேற்கொண்டார். அங்கும் பல கட்டுரைகள் ஆய்வுகள் தமிழ்பால் மேற்கொண்டார்.

1934ல் ரோம் நகரில் குருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொண்ட நேரம், கிரேக்கம், இத்தாலியம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார். அந்த நாட்களில்தான் அவரது ஆய்வில், தமிழில் முதன்முதல் அச்சிடப்பட்ட நூலான (1630) '' தம்பிரான் தோத்திரம் '' அவரது கரமெட்டியது. அவரது தமிழ்த் தூதில் கிடைத்த இன்னொரு பேறு கம்போடிய சிவன் ஆலயங்களும் அதில் படிக்கப்பெறும் மாற்றமடைந்த திருவாசகமும் இவற்றை உலகுக்கு அறிவித்த பெருமை அடிகளாரைச் சாரும்.

அவரது ஆய்வில் 'NATURE IN ANCIENT TAMIL POETRY' எனும் நூல் பல பதிப்புகளாகப் பெயர் மாற்றம் பெற்று புதிய புதிய ஆய்வுகளுடன் வெளிவந்திருக்கிறது. இதனால் அவரது புலமை உலக அரங்கில் தனித்துவம் பெற்றிருந்தது. இரண்டு ஆண்டுகள் உலகம் முழுதும் தொடர் பயணங்களை மேற்கொண்டு தமிழ் முழக்கம் செய்திருக்கிறார். அதன் முடிவுதான் அவரது செயலில் உருவான உலகத்தமிழாய்வு மாநாடும் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்த வரலாறும், இந்தக் காலத்தில் அடிகளார் மலேசியப் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேசமொழிகளின் பேராசிரியராக இருந்தார். அந்த நாட்களில்தான் முதலாவது தமிழாராய்ச்சி மகாநாடு மலேசியாவில் மலேசிய அரசின் அனுசரணையுடன் சிறப்புற நடந்தேறியது. பேராசிரியர்கள் மீனாட்சி சுந்தரனார், கமில், தாமஸ் பாரோ, மு. வரதராசனார், அ. சிதம்பரநாத செட்டியார், பிலியோஸா. க. கணபதிப் பிள்ளை, கியூப்பர், ஆஷர் போன்ற அறிஞர்களை இப்பணியில் இணைத்துக் கொண்டார். '' திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் '' என்ற வரிகளுக்கு உரமூட்டியவர் அடிகள்தான்.

1969ன் பின் மலேசியாவில் இருந்து இலங்கை வந்த பின் பல ஐரோப்பிய நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு வருகைப் பேராசிரியராக அவர் பணியாற்றச் சென்று வந்தார். அப்போதெல்லாம் போகுமிடங்களில் தமிழ் வகுப்புக் களையும், ஆய்வுகளையும், தமிழ்க் கலாச்சாரத்தின் பெருமை களையும் நாட்டத்தவறவில்லை. அவர் ஆரம்பித்த உலகத் தமிழ் ஆய்வு மகாநாடுகள் 1968ல் சென்னையிலும், 1970ல் பாரிசிலும், 1974ல் யாழ்ப்பாணத்திலும் நடந்தேறின. யாழ் மண்ணில் நடைபெற்ற மகாநாட்டின்பேறு இலங்கை அரசபடைகளால் ஏற்படுத்தப்பட்ட கொடூரமான படு கொலைகள்தான் அடிகளாரின் மனத்தை மிகவும் பாதித்தது. அதன்பின் அவரது பொது நிகழ்வுகள் அநேகமாக நின்றே போயின. அடிகளாரின் தமிழ்த்தூது தமிழுக்கும், தமிழனுக்கும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமைகள் ஏராளம். அவரது உலகவலமே இன்றைய தமிழின் ' செம்மொழி ' அந்தஸ்துக்கு வழிகோலியதென்பது மிகைப் படுத்தல் அல்ல.

கட்டுப்பாடு, ஒழுக்கம், தற்றுணிவு, ஆய்வு நேரம் பிந்தாமை என்பன அவரிடம் ஒட்டிக்கொண்டவை யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் விழாவில் தன் ஆசிரியர் பேராசிரியர் சேதுப்பிள்ளை தலைமை தாங்கக் காலதாமதமானபோது, அவரின்றியே கூட்டத்தில் பேச ஆரம்பித்து விட்டனர் அடிகள். அதுபற்றிப் பேராசிரியர் குறிப்பிட்டபோது '' தனிநாயகம் பேசுவதற்கு சபாநாயகம் வேண்டுமோ '' எனக் குறிப்பிட்டிருந்தார்.

தன் வாழ்நாள் முழுதும் தமிழ்த் தொண்டை உலகம் முழுவதும் தன்னந்தனியனாக, தூதுவராக நின்று தொழில்படுத்திய அடிகள்பற்றி இந்த ஒரு பக்கத்துள் நிறைவு செய்திட முடியவில்லை. எனினும் அவர் திருவாசகத்தைப் படித்துவிட்டு பரவசப்பட்டு '' தமிழ் பக்தியின் மொழி '' என்றாரே அது எவ்வளவு மேன்மையான கருத்து. அவரது மறைவின்பின்பு தமிழின் அந்தச் சிறப்பு ' ழ ' கரத்தின் செழுமையான உச்சரிப்பினை இதுவரை எவரிடமும் கேட்க முடியவில்லை. அது அடிகளாரின் தனிப்பெருமை. அந்த ஆளுமையைத்தான் வள்ளுவம் இப்படி வரைகின்றது.


'' அறிவுரு வாராய்ந்த கல்வியும் மூன்றன்
செறிவுடையான் செல்க, வினைக்கு ''

(குறள் : 684)

**கோத்திரன்**



சிறையில்
விரிந்த
மடல்கள்
வைகோ
இந்த புத்தகத்தை BEST FOODன் மூன்று கடைகளிலும் முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்
ரமணிச் சந்திரனின் புத்தகங்கள் அனைத்தும் £2க்கு விற்பனையாகிறது
259 - 261 London Road
West Croydon
Surrey CRO 2RL
020 8684 6269
364 - 366 Bath Road
Hounslow
Middlesex TW4 7HT
020 8577 6002
249 Northholt Road
South Harrow
HA2 8HN
020 8423 9933


DIAMONDS
PALACE
76 Tooting High Street London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்
MITHUS
JEWELLERY
322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792